1321

OFFICE OF THE REGISTRAR ...
No.
1 DEC 1924
MADRAS

கலியுகத்துக்கேற்ற

# காம தகன பாட்டு

மன்மதன் பிரப்பும், மன்மதனுடைய கல்யாண சிறப்பும், மன்மதனை எரித்து எழுப்பும் வரையிலடங்கிய

## ஒப்பாரிக் கன்னி

இஃது

நாவரம்பேடு மகா-ா-ா-ஸ்ரீ

**க. துரைசாமி பிள்ளை,**

அவர்கள் இயற்றியது

மருத்தமாநகர்

பொ. கோவிந்தராஜு முதலியார்,

பார்வையிட்டு

தி ண் டி வ ன ம்

...க்தாரியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1924

(விலை அணா 8

O-, 892MDP,K
N24
181013

OF THE REGISTRAR OF
No.
1-DEC 192

கலியுகத்துக்கேற்ற

# காம தகன பாட்டு

மன்மதன் பிரப்பும், மன்மதனுடைய கல்யாண சிறப்பும், மன்மதனை எறித்து எழுப்பும் வரையிலடங்கிய

## ஒப்பாரிக் கன்னி

இஃது
நாவரம்பேடு மகா-௱-௱-ஸ்ரீ
க. துரைசாமி பிள்ளை,
அவர்கள் இயற்றியது
மருத்தமாநகர்
பொ. கோவிந்தராஜு முதலியார்,
பார்வையிட்டு

திண்டிவனம்
சத்தாரியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
1924

Price As. 8) (விலை அணா 8

# காமன் பாட்டு.



## விநாயகர் துதி

முந்தி [illegible] விநாயகனே
ஆ[illegible]தனனே
சதுர் விநாயகனே
சாம்பசிவன் தன் மகனே
சங்கரனுக்கு முன்பிறந்த
க[illegible]மே முன்டவாய்

(2)

வந்த வினை தீர்க்கும்
மகாதேவர் புத்திரனே
வேலவர்க்கு முன்பிறந்த
விநாயகனே முன்னடவாய்
ஆல மரத்தடியில்
அமர்ந்த விநாயகனே

(3)

கற்றகலைத நான் பாட
கணபதியே முன்னடவாய்
வித்தைக்கு விநாயகனே
விண்ணோர் பெருமானே
சாத்து நல்ல பாரத்தை !
தப்பாம வெப்பொழுதும்

(4)

எழுதரியேன் கொம்பால்
 எழுதவில்லை பிள்ளையாரே
தழஞ்சாலும் கீழிருந்து
 தண்ணிமதங் கொண்டவரே
இருண்டாலுங் கீழிருந்து
 என்னைமதங் கொண்டவரே

(5)

என்னைமதங் கொண்டவர்க்கு
 என்னென்ன நான் படைப்பேன்
சீனிப் பலாப்பழமும்
 தேசத்து மாம்பழமும்
அப்பம் பழநூறும்
 அதிரசங்கள் அன் நூறும்

(6)

செப்பரிய எள்ளுருண்டை
 சேர நூறாயிரம் பூங்கரும்பு
பொரியாம் இருகலமாம்
 சீனி இருகலமாம்
தேனு மாங்கலமாம்
 படைக்கநல்ல பச்சரிசி

(7)

பதினயிரங் கலமாம்
 வாகரிசி வெள்ளரிக்காய்
மலைபோல நான்குவிப்பேன்
 பாகுகலந்த அவல்
பதினயிரங் கலமாம்
 கத்தரிக்காய் நூறும்

(8)

கடலை பதிக்கலமாம்
 மிக்க துவரையும்
விளாங்கனியும் கற்கண்டாம்
 மொத்தம் மாம்பழங்கள்
முளைப்பயிறாம் சர்க்கரையாம்
 தொந்தி வயிற்றோர்க்கு

(9)

தோணவே நான படைப்பேன்
வெள்ளிக் கிழமையிலே
வேண்டியது நான் படைப்பேன்
அள்ளி அமுது செய்யும்
ஆனைமுகப் பிள்ளையாரே
கூட்டி அமுது செய்யும்

(10)

குளக்கரையில பிள்ளையாரே
சேர்த்து அமுது செய்யும்
செக்கேணி பிள்ளையாரே
விக்கினங்கள் வாராமல்
விநாயகனே முன்னடவாய்
சாப்பிடும் என்று சொல்லி

(11)

சரணம் பண்ணார் தேவர்களும்
தாகந் தெளிந்திடவே
தண்ணீரும் சொம்பில் வைத்தார்
சாப்பிட் டெழுந்த பின்பு
சதிரான தேவர்களும்
பன்னீரும் சொம்பிலே

(12)

புது பன்னீரைக் கொண்டுவந்து
கொண்டுவந்த பன்னீரை
குபு குபுவென்று தான் சொரிந்து
பாதம விளக்கியே
பட்டாலே நீர் துவட்டி
செவ்வலரி செங்கழுனீர்

(13)

சேர்ந்த இருவாட்சி
சட்ட மரிக்கொழுந்து
சவ்வாது தானணிந்தார்
வெட்டிவேர் மருவும்
விதமான மல்லிகைப்பூ
செவ்வலரி செங்கழுனீர்

(14)

சேர்ந்த இருவாக்ஷி
புனுசட்ட மரிக்கொழுந்து
சவ்வாது தானணிந்தார்
கொண்டுவந்த புஷ்பமெல்லாம்
குபு குபுவென்று தான்சொரிந்தார்
எடுத்துவந்த புஸ்பமெல்லாம்

(15)

தொடுத்தார் சரமாக
அந்த ஆனைமுக விநாயகர்க்கு
அழகு பிறை தான் சூட்டி
சந்தன பொட்டுகள்
தானணிந்தார் நெத்தியிலே
கண்ணைவிட்டு விநாயகர்க்கு

(16)

பொன்னால் அலங்கரித்தார்
அடைக்காயும் வெள்ளிலையும்
அளித்தார்காண் விநாயகர்க்கு
அப்போ சந்தோஷமானார்காண்
சாம்பசிவன் தன்மகனும்
ஆசனங்கள் தான் விரித்து
அங்கிருந்தார் விநாயகரும்

---

## தேவர்கள் ஆலோசனை.

(17)

முப்பத்து முக்கோடி
முனிவர்களும் தேவர்களும்
நாற்பத் தெண்ணாயிரம்
நவரிஷிக ளெல்லோரும்
எல்லவரும் தானும்
எது செய்வார் விநாயகர்க்கு

(18)

மன்மதனார் தன் கதையை
மானிடர்கள் தானறிய
எல்லவரும் தானறிய
இன்பமுடன் சொல்லுமையா
சத்தி மயேஸ்வரியே
சரஸ்வதியே முன்னடவாய்

(19)
மும்மூர்த்தி மார்களெல்லாமு
முன்னடக்க வேணுமையா
வெள்ளி மலைமேலே
விமலனார் வீற்றிருந்தார்
ஆலிலைமேல் பள்ளிகொண்ட
ஆதி நாராயணரும்

(20)
சந்திரரும் சூரியரும்
தானவரும் வானவரும்
சப்தரிஷி மகாரிஷி
தவமான ரோமரிஷி
அஷ்ட லக்ஷிமியும்
அன்பான பார்வதியும்

(21)
தேவர்கள் அனைவரும்
சபையிலே தானிருக்க
கைலாச கொடுமுடியில்
கண்காக்ஷி யாய்இருந்தார்
தக்ஷிணா மூர்த்தியும்
திருமூர்த்தி யாகிருந்தார்
இந்தப் படியாய்
இருக்கின்ற வேளையிலே

---

## நாராயணர் தபசிருப்பது.

(22)
ஆலிலைமேல் பள்ளிகொண்ட
ஆதி நாராயணரும்
மைந்தன் தபசி
மகா தபசு தானிருந்தார்
அத்தபசு சிவனார்க்கு
அனலாக சூழ்ந்த தங்கே

(23)
கைலாச கொடுமுடியை
காலகண்டர் விட்டிறங்கி
என்ன வரம் வேண்டுமென்று
ஈஸ்பரனார் தான் கேழ்க்க

பிள்ளைவரம் வேண்டுமென்று
பெருமாளும் கேட்கையிலே

(24)

அப்படியே தந்தேனென்று
ஆதிசிவன் அந்நேரம்
பிரம்மாவும் நாரதரும்
பேரான இந்திரரும்
நல்ல லக்ஷணங்கள்
க்ஷேமாக தான் பார்த்து

(25)

பாரக் கிளையாச்சு
பார்ப்பவர்க்கு இளைப்பாச்சு
என்றுசொல்லி பிரம்மாவும்
இன்பமுடன் தானுமப்போ
மகாதேவரு மப்போ
மகா வரங்கள் தந்த பின்பு

(26)

மகா லக்ஷிமியு மப்போ
மன்மதனை யுற்பவித்தாள்
ஆயன் மகனாரும்
அணழகன் தான் வளர்த்தான்
அப்போ பெருமாளும்
ஆலோசனை தான் பார்த்தார்

(27)

பெண்களுக் கேற்றதொரு
புண்ணியன்காண் என்றுசொல்லி
மன்மதனா மென்று
வரிசையுடன் பேருமிட்டு
இந்தப் படியாக
இருகின்ற வேளையிலே

---

## பரமசிவனார் தபசிருப்பது.

(28)

பரம சிவனாரும்
பண்பாய் தவமிருந்தார்
மைந்தன் தபசு
மகாதேவர் தானிருந்தார்

அப்போது பார்வதியாள்
உற்பவித்தாள் ரதியாளே

(29)

அன்னநடை மயிலாளும்
அன்புடனே தானவளர்ந்தாள்
அப்போ சிவனாரும்
ஆலோசனை தானினைத்தார்
பேரிட வேணுமென்று
பிர்மாவை தானழைத்து

(30)

நல்ல லக்கினங்கள்
நலமாக தான்பார்த்து
முப்பத்தி ரெண்டு கலை
முகக்குறிப்பு தான்பார்த்து
பாரக் கிளையர்ச்சு
பார்ப்பவர்க்கு இளைப்பாச்சு

(31)

என்றுசொல்லி பிர்மாவும்
பின்பமுடன் தானுமப்போ
மன்மதனுக் கேற்ற
மங்கையிவள் என்றுசொல்லி
காமனுக் கேற்ற
கணவாட்டி என்றுசொல்லி

(32)

வடிவில் மிகுந்த தொரு
மகாதேவர் தன்மகளும்
அழகில் மிகுந்தசெசாரு
அருங்கிளியா ளென்றுசொன்னார்
அன்னரதி என்றுசொல்லி
அக்ஷணமே பேருமிட்டார்

(33)

சந்தோஷ மாகியே
தானிருந்தார் தேவர்களும்
இப்படி யாகவே
இருக்கின்ற வேளையிலே
ஏழுவயது மன்மதற்கு
இளவயது ஆச்சுதென்று

(34)

கல்யாணம் செய்யவேண்டுமென்று
காசாம்பு மாயவரும்
பரமசிவன் முன்பாக
பாங்குடனே வந்தார்காண்
ஆதிசிவன் முன்பாக
அக்ஷணமே வந்துநின்று

(35)

மகம்மேரு வில்வளைத்து
மகரிஷிகள் கேளுமென்றார்
என்மகனுக் குன்மகளை
இஷ்டமுடன் தாருமென்றார்
அப்படியே தந்தோமென்றார்
ஆதிசிவ னந்நேரம்

(36)

நல்லதென்று சொல்லி
நாராயணனும் மேது செய்தார்
தேவர்களுக் கெல்லாம்
தாம்பூலம் தந்தார்கள்
தேவாதிகள் தானும்
தாம்பூலம் வாங்கினார்கள்

(37)

முப்பத்து முக்கோடி
முனிவர்களும் வந்து நின்றார்
எல்லோரும் வந்து நின்றார்
இன்பமுடன் அப்பொழுது
பெருமானும் தானுமங்கே
பிரம்மாவை தானழைத்து

(38)

மன்மதர்க்கு பதிக்கும்
மகாமுகூர்த்த மென்றார்கள்
அப்படியே சொல்லுகிறேன்
என்றார்காண் பிரமாவும்
சாஸ்திரங்கள் தான்பார்த்து
சதுர்முகப் பிரமாவும்

(39)

வேதங்கள் தான் பார்த்து
விநோதமாய் சொல்லுகிறார்
ஆதிமூலா என் தந்தை
அருளாளா சொல்கிறேன் கேள்

## மன்மதர்க்கு கலியாணம் செய்தல்

(40)

மங்குனி மாதத்திலே
பதினெட்டாம் தேதியிலே
வெள்ளிக் கிழமைமன்மதர்க்கு
வெடிய ஐந்து நாழிகையில்
பகல் முகூர்த்த மென்று
பாங்குடனே சொன்னார்கள்
அந்த மொழி கேட்டு
அக்ஷணமே மாயவரும்

(41)

தேவர்களை யப்போ
சீக்கிரமாய் சென்று
கல்யாண பந்தலதி
சீக்கிரமாய் போடுமென்றார்
அந்த மொழி கேட்டு—தேவர்கள்
அக்ஷணமே யேது செய்தார்

(42)

முத்தால் அலங்கரித்து
முகூர்த்தக்கால் சொப்பனிட்டார்
தேவர்-வன்னி மரம்பிளந்து
வாசல் அலங்கரித்தார்
தேவர்-தென்ன மரம் பிளந்து
தெருவெல்லாம் பந்தலிட்டார்

(43)

முத்தாலே பந்தல்
முகவரிசை கட்டிவைத்தார்
பவழம் பிளந்து
பதினாறு பந்தலிட்டு

பச்சை கல்லிழைத்த
பதித்த சிம்மாசனமும்

(44)

கோர்த்த முத்து மேல்பரப்பி
வெண்முத்து கீழ்பரப்பி
வேடிக்கையாக பந்தல்
விதமா யலங்கரித்து
பந்தலசு மாண் கிரியும்
அங்கணமே தான் விரித்தார்

(45)

வெள்ளியால் விசுப்பலகை
வெண்கலத்தால் ஓசையிட
பொன்னாலே முக்காலி
போதவே தான் துலங்க
ரதியாளை தானழைத்து
கலமாய் அலங்கரித்து

(46)

ரதிக்கு எடுத்து வந்த
ஆபரணம் தான் தொடுத்தார்
எழையாயிரம் பொன் பெற்ற
இந்திரவர்ண பட்டுடுத்தி
இந்தப்படியாய் ரதியாளை
இயலாய் அலங்கரித்து

(47)

அப்பால்-மாயன் மகனுநம்
மன்மதர்க்கு அப்பொழுது
மரிக்கொழுந்து மல்லிகையும்
மன்மதர்க்கு சூட்டினார்கள்
வெட்டிவேர் மரிக்கொழுந்து
விதமான பாரிசாதம்

(48)

பரிமளங்கள் கஸ்தூரி
பாங்குடனே கொண்டுவந்தார்
தாலியும் மாலையும்
தங்க தட்டில் கொண்டுவந்தார்

மன்மதர்க்கும் மங்கையர்க்கும்
மங்கிலியம் சூட்டிவைத்தார்

(49)

கோவிந்தா வென்ற சத்தம்
கோடான கோடி யுண்டு
சிவ சிவா என்றார்கள்
தேவேந்திர தேவரெல்லாம்
சாஸ்த்திரத்தின் படியே
தேவர்கள் தான்முடித்தார்

(50)

இப்படியாய் தேவர்களும்
இருக்கின்ற வேளையிலே
ஊர்கோலம் சுற்றுமென்றார்
உத்தமனார் மாயவரும்
பந்தி பரிமாறுமென்றார்
பாங்கான தேவர்களே

(51)

தேவர்-சாப்பிட்டு கையலம்பி
தாகந் தெளிந்த பின்பு
புனுசட்டம் சவ்வாது
பூசுமென்றார் தேவர்களே
வீராதி வீரரெல்லாம்
வேடிக்கையாய் பார்த்திருக்க

(52)

தேவாதி தேவரெல்லாம்
சூழ்ந்து நின்று தான்பார்க்க
ஊதினார் சின்னம்
உலகேழும் தானதிர
பாடினார் சின்னம்
பத்து திக்கும் தான் கலக்க

(53)

ஊர்கோலம் சுத்தினார்
உலகமெங்கும் தான் தெரிய
அழகான மனோமதர்க்கு
ஆலாத்தி சுத்தினார்கள்
கோலம் முடிந்த பின்பு
கோபாலர் யேது செய்தார்

(54)
ரதிதேவி மன்மதனை
கலமாக தானழைத்து
தக்ஷ மகாராஜன்
தான் வேள்வி செய்ய லுற்றன்
அப்போ உமையவளும்
ஆனார் முகம் நோக்கி

(55)
அன்னேர வேளையிலே
ஈசனை கேழ்க்கையிலே
ஆதி சிவனாரும்
அக்ஷணமே வது செய்தார்
அண்டம் படியளக்கும்
ஆரணங்கே நீ கேளாய்

(56)
போய்வாரே னென்று
புத்தியல்லோ கேழ்க்க வந்தாய்
கன்மையும் தன்மையும்
நாயகியே சொல்லுகறேன்
கன்மையே யானல்ல
நாயகியே இங்கே வா

(57)
தன்மையுமானலே
தேன்மொழியே வரவேண்டாம்
போவென்று சொன்னாகாண்
புண்ணியனார் அன்னேரம்
நீவென்று சொல்லி
வாக்கியங்கள் கூறயில்லே

(58)
ஈசன் கோபத்துடனே
கடூரமாய் சொன்னவுடன்
உத்திரவு வாங்கிக்கொண்டு
உமையவளும் தானடந்தாள்
ஆசபாசத்துடனே
ஆதிசக்தி பயணம்டன்று

(59)

மாணிக்கப் பல்லக்கில்
மங்கையரும் வந்து நின்றாள்
ஆயிரம தாதியர்கள்
அடுக்காய் எடுக்கலுற்றார்
காடு செடி கடந்து
கரியமலைதான் கடந்து

(60)

ஓங்கி வளர்ந்த தொரு
மூங்கில் வனம் தானடந்தாள்
ஆ ராக் யோபுரம் விட்டு
அழகாபுரியில் வந்தார்
தக்கன் ஆண்மனைக்கு
தாயாரும் வந்துவிட்டாள்

(61)

கல லவென்று தகப்பனை
கண் வணக்கலுற்றாள்
வணங்கின ஈஸ்வரியை
தக்கன்-வாவென் றழைக்கவில்லை
கோபமாய் வேள்வியிலே
கொடியதக்கன் தானிருந்தான்

(62)

பதரி எழுந்திருந்தாள்
பார்வதியாள் அன்னேரம்
தக்கனிட யாகசாலை
கூடையாக போகவென்று
சாபமிட்டாள் ஈஸ்பரியும்
நயய் இருந் தழுகவென்று

(63)

ஈசியாள் சாபமிட்டாள்
பேயிந் தழுகவென்று
பெஞ்சாப மிட்டாள்காண்

என்றுசொல்லி பார்வதியும்
எழுந்திருந்தாள் அந்நேரம்
இப்படி யாகவே

(64)

எழுந்திருக்கு வேளையிலே
அப்போ மைந்தன் தபசு
மலையரசன் தானிருந்தான
மலையரசன் கெர்பத்திலே
மங்கையரும் தான்பிறந்தாள்
மலையரசன் பெற்ற

(65)

மகளும் விளையாடையிலே
நெத்திக்கு சுட்டி சுட்டி
நீலவர்ண பொட்டுமிட்டு
தாத மார்ரோடே
தவிழ்ந்து விளையாடையிலே
பாங்கி மாரோடே

(66)

பந்து விளையாடையிலே
இந்தபடியாய் சங்கரியும்
இருக்கின்ற வேளையிலே
அப்போது தக்கனவனை
வெள்ளிசன் செய்துற்றான்
சகலரை நோக்கி

(67

தபசுகளும் செய்தானே காண்
என்ன காரணத்தால் தக்கன்
இருந்தான் தபசுதிலே
கைலாசா கொடுமுடியை
தன் கைவசமாக்கவென்று
வானவர்க வெல்லாம் வந்து

(68)

பணிசெய்ய வேணுமென்று
மதிருனு லோகமெல்லாம்
பாங்குடனே ஆளவென்று
கோபமாய். வெள்ளியிலே
கொடிய தக்கன் தானிருந்தான்
ஐந்துதலை நாகம்

(69)

அன்புடனே கொண்டுவந்தான்
தலைகீழாய் தாவபிடித்து
தபசுகளும் செய்தார்காண்
அத்தபசு தேவர்க்கனே
அனலாக சூழ்ந்ததுகாண்
பத்தி எரியுதே லோகம்

(70)

பல திக்கும் வேகுதகாண்
லோகங்க ளெல்லாம
கொடிக்குள் எரிந்துவிடும்
இந்தப்படியாக தக்கன்
இருக்கின்ற வேளையிலே
தேவர்கள் ஓடிவந்து

(71)

சிவனாருக்கு தஞ்சமென்றார்
தஞ்சமென்ற தேவர்கள்
சரணம் அடைந்தார்கள்
தெண்டனிட்ட தேவர்கள்
சிவனார்க்கு எது செய்வார்
ஆண்ட முடிவதில்லை

(72)

தக்கன்-வேள்வி அழிக்கக்கூடாது
லோகங்க ளெல்லாம
கொடிக்குள் எரிந்துவிடும்

கைலாச கொடி முடியை
கண்ணெடுத்து பார்ப்பதில்லை
என நம்செல்லி தேவர்

(73)

இருக்கின்ற வேளையிலே
அப்போது சிவனாரும்
அஷணமே எதிசெய்தார்
ஈசன்மக்கள் இருவரையும்
மகரிஷியுடன் தானழைத்து
தமரான கன்பரியும்

(74)

தான்பார்த்து மெத்த
தாழ்வாசு மென்று சொல்லி
சங்கரனார் சொன்னமொழி
சரியாக வந்த கென்று
தன்மனதில் தானினைந்து
சடுக்கெனவே வந்துவிட்டாள்

(75)

சங்கரியா ளன்னேரம்
சடையில் கெங்கை தான்தரித்து
சதாசிவனார் அப்பொழுது
தனல்போல் ஒளிவீச
தங்கமெல்லாம் வேற்றைசிந்த
கனக ரோசமுடன

(76)

தனிவேற்றை தான்துடைத்து
தரைதனிலே விட்டெறிந்தார்
தண்டை வெண்டலக் குலுங்க
தங்கமுடி வீரபத்திரன்
தந்தன வென விளம்பி
தாக மெடுகே யென்று

(77)
தாளழைத்த சேதிதன்னை
தான்கேழ்க்க அன்னேரம்
சதாசிவனும் எதிரைப்பார்
தங்கமுடி வீரபத்திரா
தக்கனிட யெக்கியத்தை
தவிடுபொடி யாகசெய்து

(78
தானழித்து வாருமென்று
தணவான கோபமுடன்
தரிக்கமுடி போகாமல்
தானெழுந்து அன்னேரம்
தண்டாண்ட பிர்மாண்டம்
தாகாசப் பெருவெளியில்

(79)
தபசியில் இருக்கலுற்றார்
சாம்பசிவ ரன்னேரம்
அண்டப் பெருவெளியாப்
ஆனார் தபசிருக்க
அண்டத திசைகளெல்லாம்
அதிர்ந்து மதிமயங்கி

(80)
அவர்கள் மதிமயங்கி
ஆகாச வீதியெங்கும்
அதிர்ந்து நடுநடுங்கி
அண்டமுனி தேவர்களும்
ஆயிரங்கண் இந்திரனும்
அண்டத் தபோதனரும்

(81)
அயன்புகல்வ னாரதரும்
அனைவோரும் தான்கூடி
ஆலோசனை புரிந்து
ஆதிசிவ னாரும்
அருந்தபசு இருப்பதினால்
அனர்த்தம் வந்துநேர்ந்ததிப்போ

(82)
ஆகையினா லந்த
அரன்றபசை தானழிக்க
ஆறாலே யாகுமென்று
அன்பாக கேழ்க்கையிலே
அப்போ தருகிருந்த
அழகுமுடி நாதரும்

(83)
அன்னேற மேதுசொல்வார்
ஆயன்மகன் மன்மதனால்
ஆகுமென்று மெத்த
ஆதரவாய் சொல்லலுற்றார்
அழகுமுடி நாதரும்
அண்டர் முனிவர்களும்

(84)
அஷ்டதிசை பாலகரும்
அய்ந்துமுகப் பிரமாவும்
அரிக்கையிட்ட நாதரும்
ஆயிரங்கண் யிந்திரனும்
ஆனைவோரும் திடுக்கிட்டு
அங்கந் தடுமாறி

(85)
அவர்கள் மதிகுலைந்து
அனர்த்தம்வந்து நோந்ததென்று
அரசுக் கரசுக்கான
ஆயிரங்கண் இந்திரரும்
ஆலோசனை புரிந்து
அண்டர் சபைநோக்கி

(86)
அரிந்தீரோ தெவர்களே
ஆதி சிவனாரும்
அநந்தபசு இருப்பதினால்
அண்டசத்த சாகரமும்
அதிலுள்ள ஜீவசெந்துகளும்
அதமாய் ம[illegible]ர்துவிடும்

(87)

அரிந்திரோ தேவர்களே
அந்தஅரனார் தபசழிக்க
ஆரூலே ஆகுமென்று
அண்டரண்ட பிர்மாண்டம்
அரசாளும் இந்திரனார்
அன்பாக தான்கேழ்க்க

(88

அண்டர்முனி தேவர்களும்
ஆலோசனை புரிந்து
ஆருலு மாகாது
அரனார் தபசழிக்க
ஆயன்மகன் மன்மதனால்
ஆகவேணு மென்றுசொன்னார்

(89)

அன்புள்ள தேவர்களும்
அழகான இந்திரரும்
அனைவோரும் அன்னேரம்
அதகேட்டு இந்திரனார்
அக்ஷணமே செந்திருவர்
அவரை வரவழைத்து

(90)

ஆரோக்கிய புரமாளும்
அங்கவேல் மன்மதனை
அழைத்தோடி வாருமென்று
ஆயனுரை சொல்படி
எழுதினார் சித்திராபுத்திரன்
அழகுமணிச் சுருளோ

(91)

அருமுத்திரை தான்போட்டு
அதிசீக்கிர மாக
அனுப்பிவைத்தார் தூதுவனை
அந்த சுருளெடுத்து
ஆணொரு தூதுவர்கள்
ஆயிரங்கண் இந்திரனார்

(92)
அவர்பாதம் தெண்டனிட்டு
அமராபதி தாண்டி
அழகாபுரி தான்தாண்டி
ஆயன்மகன் மன்மதனல்
அழகுள்ள ஆரோக்கியாபுரம்
அன்பாக தான்தேடி

(93)
ஆருய்ந்தி வருகையிலே
அம்புவிபோல் தான்விளங்கும்
அங்கசவேள் மன்மதனர்
அலங்கார பூங்காவனம்
அன்பாக கண்டார்கள்
சிங்கார தோப்புகளும்

(94)
தென்ன மரத்தழகும்
தேக்கு பிலாமரமும்
செண்பகப்பூ சோலைகளும
செந்தாமரை பூவுகளும
செங்கழனீர் ஓடைகளும்
செவ்வல்லி நாகவல்லி

(95)
சென்றுமல்லி வாசனையும்
சந்தன வாசனையும்
சம்பங்கி பூமணமும்
முல்லை இருவாக்ஷி
மோகமுள்ள அல்லிமலர்
பாதரி கொன்னை தும்பை

(96)
பாரிசாத மலர்களும்
பரிமளித்து வீசுதாம்
மருவும் மருக்கொழுந்து
மஞ்சள்வெட்டி வேருடனே
மணங்கள்மிக வீசுறதும்

(97)

தேங்கனியும் மாங்கனியும்
தேனொழுகும் பாவனைபோல்
செண்டுகள் போலுதிர
சித்தசவேள் மன்மதனார்
சிங்கார நற்கிளிகள்
தேன்கோதி உண்கிறதாம்

(98)

செர்ப்பை குளத்தழகும்
சிங்கார பொய்கைகளும்
சித்ரமணி மண்டபமும்
செபித்திருக்கும் பக்ஷிகளும்
சிராக தான் பார்த்து
சிந்தை மதிமயங்கி

(99)

இடுக்கிட்டார் தூதுவர்கள்
ஆருடைய தோட்டமிதோ
அலங்காரம் என்னசொல்வேன்
அன்னம் நடக்குறது
அருங்கிளிகள் பாடுறது
ஆண்மானும் பெண்மானும்

(100)

அதுமிரண்டு ஓடுறது
சிவரத்தின பக்ஷி
சிறள்ள அன்னபக்ஷி
சிங்காரமாகவே
சிறகை விரித்தாடுறது
வண்டுகள் தேனுருஞ்சி

(101)

வசந்தராகம் பாடுறது
வசந்தகால் பண்டபமும்
வர்ணமணி சாலைகளும்
வச்சிரமணி திண்ணையின்மேல்
வாசனை வீசுறது
வந்ததொரு தூதுவர்கள்

(102)

வர்ணிக்க மாட்டாமல்
வந்த பசியதினால்
வனத்தில் கனிபறித்து
வாழ்த்திமிக உண்டபின்பு
ஆரோக்கிய தடாகமதில்
அவர்கள்புனல் உண்டபின்பு

(103)

ஆயாசம் தான்தெளிந்து
அவர்கள் மனமகிழ்ந்து
அதிவேகமாய் நடந்தார்
அந்த-அமரிட மிருவர்கள்
ஆலோசனை புரிந்து
இந்திரலோகம் தனக்கு

(104)

ஈடல்ல ஆரோக்கியாபுரம்
சந்திரலோகம் தனக்கு
சரியல்ல ஆரோக்கியாபுரம்
அந்த-அழகா புரியிலும்
அதிசயம் ஆரோக்கியாபுரம்
மயாவு தாரமுள்ள

(105)

மாயவனுர் பெற்றெடுத்த
மதன சிங்காரமதன்
மாணிக்க சோதியுள்ள
மணியான ஆரோக்கியாபுரம்
மண்டபமும் சன்னதியும
மன்மதரூங் கோபுரமும்

(106)

வர்ணமணி சாலைகளும்
மகரக் கொடிபறக்க
மன்னவர்கள் எச்சரிக்க
வசந்த மணிமார்பன்
பாரசங்கு தானூத
மத்தளங்கள் ஓசையிட

(107)

மங்கையர்கள் நடனம்செய்ய
வாத்தியங்கள் தானூத
மகாமுரசு தானதிர
மண்டலத்து சந்திரன்போல்
மதன உல்லாசமுடன்
மன்மத ரூசேந்திரனார்

(108)

மங்கைரதி யாளுடனே
மகிழ்ச்சியுடன் தானிருக்க
பங்கைப் படைகளெல்லாம்
ணங்கியிக கொண்டாட
மகரக்கொடி பறக்க
மதமிகுத்த மஸ்ரதங்கள்

(109)

வாய்விட் டார்பறிக்க
மாயக்கிளி கொஞ்ச
மகிழ்ந்து கொலுவிருந்து
மனுநீதி செங்கோல்
மண்டலத்துக் கேற்றபடி
மங்களமாய் தானுண்டு

(110)

மகிழ்வாய் இருகையிலே
வந்தொரு தூதுவர்கள்
மகிழ்ச்சியாய் கொண்டாடி
வரிசையாய் சிற்சையிலே
மன்மதர் தூதரைக்கண்டு
வாருங்கள் தூதுவரே

(111)

வந்தொரு காரியங்கள்
வன்மையுடன் சொல்லுமென்று
வகையுடனே தான்கேட்க
வமாரிட தூதுவரும்
வானவர் அவரனுப்ப
வந்தோமென்று உங்கள்துரை

(112)

மன்மதர்க்கு சொல்லுமென்றார்
மங்கசவேள் தூதுவரும்
வரிசையுடன் தான்கேட்டு
மாயன்மகன் மன்மதற்கு
வணக்கிமிக சொல்லையிலே
மன்மத ராஜேந்திரனார்

(113)

வானவர்கள் தூதுவரை
வரவழைக்க சொன்னார்காண்
வந்தொரு தூதுவர்கள்
வணங்கிஉரை செய்யலுற்றார்
அரசுக் கரசுக்கான
அமரர் சுடாமணியே

(114)

ஆயன் மகனே
ஆணழகா போற்றியென்றார்
அதுகண்டு மன்மதனார்
நீங்கள்-யாருடைய தூதரென்று
அடவுடனே கேழ்க்கையிலே
அமரரிட தூதரென்று

(115)

அடவா யுரைக்கையிலே
ஆனாலும் நீங்கள்வந்த
அதிசயத்தை சொல்லுமென்றார்
அங்கசவேள் மன்மதனார்
அதுகேட்டு தூதுவரும்
அன்பாக தானுரைப்பார்

(116)

அண்டமுனி தேவரெல்லாம்
அங்கே சபைகூடி
அண்டத்தில் உம்மையவர்
அதிகமென்று சொல்லி
அரனார் தபசழிக்க
ஆரும் ஆகாது

(117)

ஆசையினு நம்மை
அழைத்துவர சொன்னார்கள்
அதி சீக்கிரமாக
அவரோலே கொண்டுவந்தோம்
என்று அடிவணங்கி
இன்பமுடன் சொல்லலுற்றார்

(118)

அரசரிட தூதுவர்கள்
அதுகேட்டு மன்மதனார்
சீக்கிரமாய் தானெழுந்து
சிங்கார கற்கொலுவில்
சிறந்த மணிச்சுருளை
சிறுக தானெடுத்து

(119)

திருமுத்திரை உடைத்து
சேதிகளை கண்டறிந்து
சீக்கிரமாய் தானெழுந்து
சிங்காரமாக ராஜன்
ராஜாதி ராஜன்
ராஜப் பிரதாபன்

(120)

ராஜ பார்த்தாண்டன்
ராஜகுண குணன்
ராஜ கெம்பீரன்
ராஜ விர்ப்பனன்
ராஜ மகாராஜன்
ராஜ பயங்கரன்

(121)

ராஜ ஒய்யாரன்
ராஜா பயணப்பட்டு
நடந்து வரும்சேதி
ரதிதேவி தான்கேட்டு
ரத்னமணி உஞ்சல்விட்டு
ரதிதேவி அன்னேரம்

(122)
ராலாத்தி தானெடுத்து
ராக வெழிலுடனே
ரடிபணிந்து தெண்டனிட்டாள்
நவரத்தின பெண்ணரசியாள்
அன்னமே சாராவே
அமுர்த பசுங்கிளியே

(123)
அழகுமயில் கோகிலமே
அரும்பான மல்லிகையே
அற்புத சிங்காரமுள்ள
அரும்பவ ரத்தினமே
அபரஞ்சி தன்னொளிவே
அனைவோர்க்கும நாகனேலை

(124)
அலங்கார பெண்ணரசே
ஆணிக் கனகமூர்த்தே
ஆபரண பொக்கிஷமே
அப்புவியில் பெண்ணமூர்த்தே
அறம்பையர்க்த நாயகமே
ஆதிசிவன் புத்திரியே

(125)
ஆசைக்குகந்த எந்தன்
அன்பான காதலியே
அந்திர லோகமதில்
அகில பதம்பெரும்
ஆயிரங்கண் இந்திரனும்
அனுப்பிவைத்தார் தூதவரை

(126)
ஆலையினுல் நானும்
அரைவினாடியில் நான்போயி
அதையரிந்து வாரேனடி
அன்பாக சிலவுதந்தா
அழைப்புமென்னூர் மன்மதரும்

[ரதிதேவி சொல்]

(127)

அமரர் கதிபதியோன்
ஆயிரங்கண் இந்திரனார்
அனுப்பினார் தூதரென்று
அன்பாக சொல்லவந்தீர்
அரசுக் கரசே

(128)

அமரர் சுடாமணியே
ஆயனார் ஈன்றெடுத்த
அறிவுள்ள மந்திரியே
அமரர்லோகம் நீபோனால்
அனர்த்தம்வந்து நேர்ந்திடும்
அபகேடு செய்திடுவார்

(129)

ஆகாது மன்னவனே
அழகுள்ள என்கணவா
அடியாள் அலைந்திடுவேன்
ஆதரவில்லை எந்தனுக்கு
அனாதியாய் நின்றிடுவேன்
ஆசையினால் என்கணவா
அழகுதிரு மண்டபத்தில்
அமர்ந்து கொலுவிருந்தால்
அடியாள்யான் வீற்றிருப்பேன்
அழகுரதி தேவியரும்

[மன்மதர் சொல்லல்]

(130)

காலை இளங்குயிலே
கானகத்து பெண்கிளியே
காந்தியுள்ள வண்டினமே
காடைப் புராயினமே

(131)

கணக்கெழுதும் புஸ்தகமே
கருத்துள்ள மந்திரியே
கலைமான் வடிவினமே
கன்னி யிளங்குயிலே

(132)

காமக் கணைக்கில்
கலைக்கேற்ற வல்லபியே
கஸ்தூரி கற்புறுசே
கதம்ப பொடிவசமே
கலைநிறைந்த பெண்ரதியே
கற்பூர வாசகமே

(133)

சற்கண்டு சர்க்கரையே
கருத்தாக கீர்கேளும்
கங்காதரன் உன் தகப்பன்
கனயோக மாகமிக
கறந்தபசு இருப்பகிறுல்
கலங்கியே தேவரெல்லாம்

(134)

காரியமாய் தான்கூடி
கங்காதரன் தபசை
கண்டரிய மாட்டாமல்
கருத்தாய் எனையழைத்தார்
கண்டரிந்து வாரேனடி
கன்னிரதி பெண்ணரசே

[ரதிதேவி சொல்லல்]

(135)

கரியமால் முகுந்தன்
கார்மேக வண்ணன்
கதிர்குலத்து பாண்டவரை
கார்க்குமந்த மாயவரும்
கறிவண்டு போல் திரிந்து

(136)

காப்பாற்றி விட்டமகன்
கற்பக வாழ்வரசே
காமதி சிந்தாமணியே
கட்டழகா உன்னைவிட்டு
கால்நாழி இங்கிருக்கேன்
கானக தேவர்களும்

137

கண்டு கடுகெதி
 கண்ணாட்டி மார்பழகா
கன்னிசுக வாசகமே
 சாந்திசந்த்ர காந்தியுள்ள
கட்டழகா மன்மதரே
 கனவிலும்மை போகவிட்டு

138

என்னி யிருக்கறியேன்
 காந்தியுள்ள பெண்ணரசே
கன்னிசுக வாசகமே
 காளியுடன் கூத்தாடும்
கபாலயீஸ்வரன் பெற்றெடுத்த
 கன்னிரதிக் கிளியே

(139)

கதறி யழுகதே
 கடுகப்போய் வாரனிப்போ
கனமான வார்த்தையிது
 கடுகெனவே சொல்லியிப்போ
கனமான மன்மதரும்
 கடுகபயண மிட்டார்

(140)

ஆசைக் குகந்தஎந்தன்
 அன்பான காதலியே
அரைநொடியில் நான்போயி
 அதையறிந்து வாரேனடி
அன்பாய் சிலவுதந்து
 அனுப்புமென்றார் மன்மதரும்

(141)

அந்திர லோகமதில்
 அயிரா மதமேலும்
ஆயிரங்கண் இந்திரர்காண்
 அனுப்பினார் தூதவரை

[ரதிதேவி சொல்லல்]

(142)

மன்மதனார் சொன்னதொரு

வாய்மொழியை தான்கேட்டு
வஞ்சிக் கொடியிடையாள்
மகாதேவி புத்திரியாள்
வணக்கமுடன் நின்றுரைப்பாள்
மாயன் மகனே

(143)

மைத்துனரே எண்கணவா
மன்மத ராஜேந்திரனே
வட்டமதி குடையாகி
மகரக் கொடியானே
மங்கைப் படையோனே
வர்ண கிளிபூண்ட

(144)

மாருத்த தேரோனே
மாயவனார் கண்மணியே
வானுலகில் தேவரும்மை
வரவழைத்த காரியமேன்
வந்ததென்ன தூதுவர்கள்
வாய்திறந்து சொல்லுமென்றாள்.
மங்கைரதி பெண்ணரசும்

[மன்மதர் சொல்லல்]

(145)

தெய்வநார்பை மெச்சுகின்ற
தேனே ரதிக்கிளியே
தேவியரே சொல்லுரேன்கேள்
தேவிந்திரனும்

(146)

திவ்யமாய் தூதர்களை
க்ஷணத்தில் அனுப்பிவிட்டார்
செங்கோல் அரசாண்டுகொள்
சீக்கிரமாய் வாருமென்றார்
ஆகையினால் நான்போய்

(147)

அரைகொடியில் சேதிசொல்லி
ஆறணங்கே வாரேனடி

அழுது புலம்பாதே
அன்னமே ரஞ்சுகமே
ஆலவாய் செங்கரும்பே
அமுர்த பசுங்கிளியே

(148)

அபரஞ்சி உன்னிதமே
ஆணிப்பெண் ஷண்பகமே
ஆசைக் களஞ்சியமே
ஆய்ந்த நவமணியே
அடைக்கலம் வால்குருவி
அந்த குரலெழும்பி

(149)

அனேகக் காத்தொழிலை
அன்பாக பாராயடி
அகமகிழ்ந்து மெய்சோர்ந்து
அளவில்லா காமவெள்ளம்
ஆராய் பெருகிடவும்
ஆசைமகில் பூண்டென்னை

(150)

அணைந்து சுகிப்பாரடி
அனுப்புமென்று தேவியுடன்
ஆண்மையுடன் தானுரைத்தார்
ஆயன்மகன் மன்மதரும்

[ரதிதேவி சொல்லல்]

(151)

டண்ட கயிலாசமதில்
டங்குள்ள மயேஸ்பரனார்
டன்பாய் விகாரமுடன்
டண்டக் கிரியைவிட்டு
டண்டப் பரவெளியில்
டருந்தபசு தான்புரிய

(152)

டண்டமுடி தேவர்களும்
டங்குள்ள தபோதனரும்
டங்குதிசை பாலகரும்
டங்கித வாத்தியமும்

டண்டயிட மில்லாமல்
டண்டசத்த சாகரமும்

(153)

டங்கரசு இந்திரனார்
டன்பான மண்டபத்தில்
டண்டங் கலங்கிவிழ
டஞ்சி திடுக்கிட்டு
டாயிரங்கண் இந்திரரும்
டங்கையை முடிசோர்ந்து

(154)

டாராலே யாகுமென்று
டங்கையை மதிகேழ்க்க
டாராலு மாகாது
டண்டம் படியளந்த
டன்பான மாயவனார்
டவரீன்ற மன்மதனால்

(155)

டவனாலே யாகுமென்று
டனைவோரும் சொல்லையிலே
டதகேட்டு இந்திரரும்
டானாலும் மன்மதனை
டடிகிவர வேணுமென்று
டனிஓலை தானெழுதி

(156)

டங்குள்ள தூதர்கையில்
டனுப்பினார் அண்டரெல்லாம்
டாண்மையுள்ள என்புருஷா
டாகாது டாகாது
டவதிவந்து சேர்ந்துவிடும்
டங்கை அலைந்திடுவேன்

(157)

டாருமில்லை எந்தனுக்கு
டஞ்சசமே கேளுமென்றாள்
டய்யல்ரதி தேவியரும்

[மன்மதர் சொல்லல்]

(168)

கற்பக தேனுனை
 கண்ணுயிரம் படைத்த
கட்டழக னிந்திரனும்
 கனமான நாரதரும்
கமலத்தில் வந்துதித்த
 கருத்துள்ள பிர்மாவும்

(169)

கன யோசனைகள்செய்து
 கடுகெனவே அதனுப்பி
காரியமாய் தானழைக்க
 கட்டழகன் போவதற்கு
காலகண்ட மீஸ்பரனுர்,
 கருத்தில் உதித்தெழுந்த

(170)

கன்னிரதி தேன்மொழியெ
 காம பசுங்கிளியே
கனக சந்தோஷமுடன்
 கட்டழகா யேகுமென்று
கன்னி விடைகொடுத்தால்
 நான் சுனைதென்றல்தேரேறி

(171)

கரும்புவில்லை தானெடுத்து
 கன்னிப் படையுடனே
கடுகெனவே யானேகி
 கட்டழகன் இந்திரனை
கண்டுமிக வார்த்தைசொல்லி
 காரியங்க ளுண்டானல்

(172)

கடுகெனவே யான்பார்த்து
 கட்டழகன் ஓடிவந்து
கண்மணியின் மெத்தையின்மேல்
 கலந்துமிக லீலைசெய்து
கன்னியரே காமிருப்போம்

கலங்காதே யென்ற
கருத்தாக தானுரைத்தான்
கன்னிரதி யாளுடனே
(173)
[ரதிதேவி சொல்லல்]
நால்வேத சாஸ்திரமும்
நவநீத தத்துவமும்
நற்பாவ புண்ணியமும்
(174)
நன்றாக தானறிந்த
நாளைவரும் காரியங்கள்
நமக்குத் தெரியாதா
நாடோடி பாவனைபோல்
நாம்பேசவ தல்லாமல்
நமக்கு நல்லகாலமட்டும்
(175)
நாடெங்கும் தான்வருவார்
நலம்தப்பி நின்றுவிட்டால்
நாடார் ஒருவருந்தான்
நாகபாண சக்ரவர்த்தி
நாயகனே சக்ரவர்த்தி
நளராஜ பூபதியும்
(176)
நாராயணன் அருளால்
நங்கை தமையந்தியுடன்
நாடாண்டு இருக்கையிலே
நணிகாதம் வருகின்ற
நாதன் சனிபகவான்
நாம் கோரினபெண்ணை
(177)
நளன்ஜெயித்தா னென்றசொல்லி
நல்லது ஆகட்டும்
நன்மையுடன் வாழ்ந்திதனை
நானறிய போரேனென்று
நல்சபதம் தான்கூறி
நாடாளும் புஷ்கரனே

(178)

நளனுக் கெதிரியதாய்
நன்மை சூதாடயிலே
நாட்டிலுள்ள பேர்களெல்லாம்
நாசபையில் தானேடி
நளராஜ பூபதியும்
நன்மையுட னுகின்ற

(179)

நளராஜ பூபதியே
நாங்கள் இதுவரையில்
நம்பி இருந்தோமையா
நாடாண்ட நீதியினால்
நவநீதி தப்பிஇப்போ
நாடிவந்த ராஜனுடன்

(180)

நல்பகடை யாவது
நலமல்ல மன்னவனே
நாடு நகர் பேய்விடும்
நாங்கள் அலைந்திடுவோம்
நாடாண்ட ராஜரெல்லாம்
நகைப்பார்கள் நீதியினால்

(181)

நாடியவர் சொல்லியே
ராஜாதி ராஜனே
ராஜப் பிரதாபனே
நடுக்க மனர்சீரி
நளராஜ பூபதியே
நாடிவந்து சொன்னதொரு

(182)

ஞாயத்தைப் பாராமல்
நாடிழந்த பாவனைபோல்
நான்போவே னென்றுசொன்னால்
ஞாயமோ என்கணவா
நானிதுக்கோ மாலையிட்டேன்
நாடிவந்த தூதர்களே

(183)

நன்மையுடன் தானனுப்பி
  நயனமணி மண்டபத்தில்
நவரத்ன சிம்மாதனத்தில்
  நயந்து கொலுவிருந்தாள்
நல்லதுதான் னென்றுரைத்தாள்
  நயனாதி தேவியரும்

(184)

[மன்மதர் சொல்லல்]

பெண்ணேயேன் துடிக்கிறாய்
  பூசிய சந்தனமே
பூவில் மலர்க்கொடியே
  பூந்துகிலே பெண்ணரசியே
புத்தியுள்ள பெண்ணரசே

(185)

பூமணத் திருமகளே
  பொங்குமதி யொளியே
புருஷாள் விரகமே நீ
  பூந்தாமரை யிதழே
புகல்வேன் ஒருவசனம்
  பெண்புத்தி கேட்டு

(186)

பிழைப்பாளோ பெண்ணாங்கே
  பெலமும் சவுரியமும்
பெண்ணாங்கே கண்டிருந்து
  பேய் பிடித்தாய்போல
பிணத்துகிறாய் பெண்மயிலே
  பெண்ணே நவமணியே

(187)

பெரியதொரு ரத்தினமே
  பேயாண்டி தன்மகளே
பூமுடி தேவரெல்லாம்
  போதித்தே யெனையழைத்தார்
போகவேணும் ஆகையினால்
  பிரியமுடன் எந்தனுக்கு

(188)

போக விடைகொடுத்து
பூங்குயிலே மாங்கனியே
பொக்கிஷமே நர்க்கனியே
புனுசவ்வா தொளிவே
பூர்க்கும் மலர்க்கொழுந்தே
பொருளான மாதுமையே

(189)

பேசுங் கிளிரசமே
பேருநடை அன்னமே
பெண்கள்தனில் சத்திரமும்
பெண்ணேநீ கேளுமென்றார்
பிரியமுள்ள மன்மதனார்

(190)

[ரதிதேவி சொல்லல்]

வர்ண துயில் உடுத்தி
வந்துவிளையாடுமென்று
வாடி அடிமானே
மருவிவிளையாடுமென்றார்
வாயைத் திறந்துமே
வாக்குருதி சொல்லுமென்றார்

(191)

வானவர்களெல்லாம்
வரவழைத்தார் இப்போது
வானலோகம் நீபோனால்
வகைமோசம் வந்துவிடும்
மடிப்பு நினைந்திடுவார்
வரவிட்ட தூதவர்க்கு

(192)

வார்த்தைசொல்லி நீ அனுப்பும்
வைகுண்டத்திலே இருக்கும்
வர்ணமுள்ள என்தகப்பன்
மடிப்பே நினைந்திடுவார்
வாகாது என்றுசொல்லி
அடிவணங்கி தெண்டனிட்டாள்

(193)

வாக்குள்ள அன்னாதி
சிங்கார மன்மதனே
சீரான தேவர்களும்
சிலக்கபிலை நாணனிந்து
சீராக என்தகப்பன்
சிவபதியில் தானிருக்க

(194)

சிருகரும்பு வில்லெடுத்து
சிவன்மேல் கணைதொடுத்தால்
சிந்தைதெளிந்து என் தகப்பன்
சிரித்து புரமெரிப்பார்
சித்தடியாள் வார்த்தை
சிறுசெவியில் ஏறலையோ

(195)

தெண்டனிட்டாள் அன்னாதி
மான மதுவிந்த
மண்டலத்து சந்திரனே
மந்தாமரை பூமலரே
மல்லிகை பூச்செண்டே
மருமுடிக்கும் பூஞ்சரமே

(196)

மருவே மருக்கொழுந்தே
மதன கஸ்தூரியே
வானோர் புவியிலுள்ள
மாணிக்க கற்பகமே
என்னை-மாலையிட்டு கைபிடித்த
மணவாளா என்னசொன்னீர்

(197)

மாயனார் உன் தகப்பன்
அமர்-வலுமையினால் இந்தமொழி
மகாவீரியம் தானுரைத்தீர்
மகாதேவர் முன்பாக
மனுமுதலோர் நில்லார்கள்
மகா வீரியமும் செல்லாது

(198)

மகுடமுடி தேவர்களும்
மகிபதி தேவேந்திரனும்
மகாமுனி தபோதனரும்
மாறு பாடாகவே
வரவிட்டார் தூதர்களை
மாயன்மால் வீரியத்தை

(199)

மதியிலே தானினைத்தாய்
மகாதேவர் தன்கோபம்
மரிப்பார் ஒருவரில்லை
மயக்கம்வந்து நேர்ந்துவிடும்
மனையாள் தன்வாக்கு
மறுவார்த்தை சொல்லாதே

(200)

மாளிகையில் நீயிருந்தால்
மங்கையரும் இங்கிருப்பேன்
மன்மத சிங்காரமுடன்
மன்மதரே என்றுசொல்லி
மறுவார்த்தை யேதுரைப்பான்
மங்கைரதி தேவியரும்

(201)

[மன்மதர் சொல்லல்]

எண்ணமெல்லாம் பொய்யடி தான்
எழுத்தின்படி மெய்யடி தான்
ஈஸ்பரனார் தன் மகனை
யிங்கித்தரி வாழ்க்கை
இது நமக்கு மெய்யடி தான்

(202)

அங்கத்தின் வாழ்வு
அது நமக்கு மெய்யடிதான்
அற்புதச் சிரேகமடி
ஆவி யொடுங்க முன்னே
உப்பிருந்த பாண்டம்
உடையமுன்னே கெஞ்சடியே

(203)

நீரில் குமளியடி
நிஷயமத்த பொய் வாழ்வு
ஓட்டு செவாடிதான்
ஓயா கவலையிது
காத்தடைந்த காயமடி
கர்மசண்டாள புத்தியடி

(204)

புளியம்பழம் தோலடிதான்
புதுமையுள்ள பெண்ணரசே
புண்ணியனும் சொன்னதொரு
பிசகுபிழை தான்கேட்டு
புத்தியுள்ள பெண்ணரியாள்
புதுமையுடன் யேதுரைப்பாள்

(205)

புஷ்பகணை தொடுக்கும்
பிரியமுள்ள என்புருஷா
புருஷ வஜ்ரமே
பிரகாச முள்ளவரே
பிரபல்ய கெம்பீரா
புஷ்பகணை பிடிக்கும்

(206)

புருஷ சிகாமணியே
பூலோக சுத்திரனே
பூக்கிளி தேரேரி
புஷ்பகணை யெடுத்து
போவது நீ தர்மமல்ல
புண்ணியனே யென்சுவாமி

(207)

பொன்னுலகம் போனல்
பிழைமோசம் வந்துவிடும்
இந்தப்பெண்ணரசி சொல்கேட்டு
போகிறீர் வேண்டாங்காண்
பிரியமுடன் தானுரைத்தாள்
பேசுங் கிளிமொழியாள்

(208)

[ரதிதேவி சொல்வது]

மாயோனும் ஈன்றெடுத்த
மாலே மணிவிளக்கே
மங்கைபெற்ற ரத்தினமே
மன்மத ராஜேந்திரனே
வட்டமதிக் குடையே

(209)

வாணத்து அம்புவியே
மகரக் கொடியோனே
மங்கை படையோனே
வர்ணக் கிளிபூண்ட
மருதத் தேரோனே
வசந்த ஒய்யாரமுள்ள

(210)

மாயவனார் கண்மணியே
மாணிக்க தன்னொளியே
மதமிருந்த மத்தகமே
வானுலகில் தேவரும்மை
வரவழைக்க காரணமேன்
வந்ததென்ன தூதுவர்கள்
வாய்திறந்து சொல்லுமென்றாள்
மாதாரதி தேவியரும்

(211)

[மன்மதர் சொல்லல்]

ஒன்பது வாசல்கோட்டை
உறுதியென்று லோகமெங்கும்
நம்பி இருக்குதடி

(212)

காசாத்தின பெண்மயிலே
அவரவர்கள் செய்தவினை
அவரவரே அனுபவிக்க
ஆரணங்கே பெண்மயிலே
தர்மத்துக் கொருநாளும்
தாழ்வரப் போரதில்லை

(213)

திருவிளை சாக்ஷியதாய்
செப்புகிறேன் தேன்மொழியே
நமக்கு ஆராரிருந்து மென்ன
மாராத வானவர்கள்
வைகமோசம் செய்துவிட்டார்
நேராக பிர்ம லபி

(214)

நமக்கு-நேர்ந்ததே யாமாகில்
தேராத செல்வமெல்லாம்
சுவரயிட்ட பாவனைபோல்
தேம்பித் தவிக்காதே
தோகைரத்ன பெண்மயிலே
மயிலும் குயிலும்

(215)

மருவி யிருந்தாப்போல்
மாயன் மசனரே
மைத்துனரே என்கணவா
மனையாட்டி இங்கிருக்க
மனமகிழ்ந்து தேவர்களை
வாருமென்று நீ யுரைத்தால்

(216)

மனையாள் மனம்நோக
மதிமோசம் வந்துவிடும்
மாயவனார் கண்மணியே
பங்கை சிகாமணியே
மங்கை மகிழ்ந்து பெற்ற
மதியிருந்த மத்தகமே

(217)

மன்னுாழிய காலமட்டும்
மனமகிழ்ந்து இருவோரும்
வாழலாமென் றிருக்க
மாமாங்கம் பொங்குமுன்னே
வந்தமனு போகுமுன்னே
மாலை சுருங்குமுன்னே

(218)

மாபாவி சாபமுண்டோ
மாமிஎனும் தேவி
மகா-லக்ஷிமியாள் சாபமுண்டோ
மத்துவெண்ணை பால்திருடி
மத்தா லடிப்பட்டு
மணியுரலில் கட்டுபட்ட

(219)

மதமிகுந்த கிருஷ்ணனுட
மணகொந்து சாபமுண்டோ
மண்டலம் பதினாலும்
வரிசை கணக்கெழுதும்
மாபாவி சித்திராபுத்ரன்
வஞ்சனையாய் என் தலையில்

(220)

வரமெழுதி வைத்தானோ
இந்த தலைவிதிக்கோ
மாபாவி யாண்பிறந்தேன்
புத்தியுள்ள என்கணவா

(221)

[மன்மதர் சொல்லல்]

சத்த சாகரமளிக்கும்
சதாசிவனார் கண்மணியே
சமரச மோகனமே
சரச ஒய்யாரமுள்ள
சர்குண பெண்மயிலே
சமஸ்தசெய்வ கன்னியரும்
சதகோடி ரம்பையர்கள்

(222)

தான்மெச்சும் பெண்ரதியே
தயங்கவந்த நீதியென்ன
தையல் ரதியாளே
தயாபரனார் உன்தகப்பன்
தயாளகுணமு மில்லை
சத்தறிவு மில்லாமல்

(223)

சுகஜீவ ராசிகளும்
தத்தளிக்க இப்போது
தவசியி விருப்பதினல்
சதகோடி தேவர்களும்
சஷ்டமுடி பாலகரும்
தானுளும் இந்திரனும்

(224)

சங்கைகளே தானுரைக்க
சடைமுடிகள் தான் தரிக்க
தபோதனரும் நாரதரும்
தான் கூடி எதுரைப்பார்
சங்காஞர் அந்தாத்தில்
தபசியில் இருப்பதினல்

(225)

சதிவந்து சேர்ந்ததிப்போ
சர்பபுலி தோலணையும்
சதாசிவஞர் தன் தபசை
தைரியமாய் தானழிக்க
காரூலும் மாகாது
தைரிய சாலியவன்

(226)

தான்மிகுந்த மன்மதஞர்
சற்குணவான் தைரியனோ
தானழைத்து வந்தால்
தானுகு மென்று சொல்லி
தங்கமுடி தரித்த
தர்ம-தேவேந்திரன் முன்னே

(227)

தானுரைத்தார் நாரதரும்
இனி-சங்கமுடி போகாது
தார்குழலே பெண்ரதியே
தங்கிவிட்டோம் யாமதில்
சகலமுடி தேவர்களும்
சடைகோழை என்பார்கள்

(228)

சங்கையில்லா கண்மணியே
சகலகலை நால்தெரிந்தால்
தடங்கலாய் சொல்லாதே
தர்மமோ உந்தனுக்கு
தவமிகுந்த பார்வதியாள்
தான்பெற்ற பெண்ணரசே
தயவாய் அனுப்பிவையும்
தங்கமயில் பெண்ரதியே

(229)

[ரதிதேவி சொல்லல்]

மானத்து மீனே
மகரக் கொடியோனே
மணமுடிக்கும் ஷண்பகமே
மங்கை பெற்ற ரத்தினமே

(230)

மன்னர்முடி மேலிருக்கும்
மந்தாரை பூமலரே
மருவே மருக்கொழுந்தே
மல்லிகை பூச்சரமே
வானோர் புவியிலுள்ள

(231)

மடிவான கற்பகமே
என்னை–மாலையிட்டு கைபிடித்த
மணவாளா என்புருஷா
இந்தமாபாவி யானதொரு
மகாதேவி புத்திரியாள்
மணம்நொந்து இங்கிருக்க

(232)

மாயன் மகனே
மைத்துனரே என்கணவா
மணந்துணிந்து வாரேனென்று
மாயமொழி அறியேன்
மர்மமொன்றும் நானறியேன்
மகிழ்ச்சியோ என்கணவா

(233)

[மன்மதர் சொல்லல்]

அந்த அமரரிடம் போனால்
அனர்த்தம் வரும் என்றுசொல்லி
அன்பாய் எனை நடக்க
ஆகாது உந்தனுக்கு
ஆடு மயிலே என்

(234)

அபரஞ்சி உன்னிடமே
ஆரணங்கே சொல்கிறேன்கேள்
ஆதிமுன் நாளையிலே
அமர்ந்தவட மதுரையிலே
ஆயனார் என்தகப்பன்

(235)

அவனுடைய அம்மான்
ஆகாத கஞ்சனவன்
ஆண்டிருக்கும் நாளையிலே
அந்தணர் புரோகிதரும்
அலங்கார கஞ்சனுக்கு
அக்ஷதையும் தானளித்து

(236)

ஆசீர்வாதம் செய்தபின்பு
அவர்முகத்தை தான்பார்த்து
அரசு பதியோனே
அனந்த கஞ்சனேகேள்
அன்புள்ள உன தங்கை
அவள் வயிற்றில் எட்டுபிண்டம்

(237)

ஆண்பிள்ளை தான்பிறக்கும்
அவனாலே உந்தனுக்கு
அனர்த்தம்வரும் என்றுசொன்னார்
அந்தணரும் அப்போது
அன்றுமுதலாக அவன்
மாமன் வாசுதேவனையும்

(238)

அவன் தங்கை தேவகியும்
அரும் விலங்கு தான்பூட்டி
அரமான மண்டபத்தில்
அருஞ்சிறையில் தானிருக்க
ஆனைபரி சேனைதளம்
அணிஅணியாய் காவல்வைத்து

(239)

அந்த சமயத்தில்
அன்பான தேவகியும்
அவள்கெர்ப்பம் தான்பிறந்து
அதுசேதி தான்கேட்டு
அக்ஷணமே ஓடிவந்து
அந்தசிசு எங்கேயென்று

(240)

அங்கரித்து தான்வாங்கி
அறுத்து எரிந்திடுவான்
அப்போ-வாசுதேவரும் நல்ல
வருவையென்று தேவகியும்
ஆரண்டு நடு நடுங்கி
அங்கம் தடுமாறி

(241)

அவர்கள் மதிகுலைந்து
அஞ்சு பஞ்ச பூதமும்தான்
அது ஓடி நிற்கையிலே
அவர்கள் பயந்தவிர்க்க
ஆயனூர் எம்பெருமாள்
ஆதி கிரோண்டணியாய்

(242)

அழகு திருமணிபோல்
ஆதார மில்லாமல்
அலைகின்ற தேவகியாள்
அவள்வயிற்றில் தானுதித்தார்
அந்தப் படிபோலே
அந்த-அமரர் பயந்தவிர்க்க

(243)

அவர்வயறதில் தானுதித்தோம்
ஆயனூர் உள்ளமட்டும்
அமரொரு நாளுமில்லை
அரும்பான மல்லிகையே
அமர்த சிகாமணியே
அழகுள்ள பெண்ரதியே
அன்பாய் சிலவு தந்து
அனுப்புமென்று தானுரைத்தார்
அங்கசவேள் மன்மதரும்

(244)

[ரதிதேவி சொல்லல்.]

ஆனாலும் என்புருஷா
இந்த அரிவையறிந்ததொரு
ஆண்குயிலே சொல்கிறேன் கேள்
அம்மாமி சீதையாரை
அரக்கனவன் ராவணனும்

(245)

அவகேடு தானினைந்து
அருஞ்சிறையில் வைப்பதினால்
அவன் தம்பி யானதொரு
அன்புள்ள விபீஷணனும்
அண்ணன் முகம்நோக்கி
அடவாக தானுரைப்பான்

(246)

அண்ணாவே அண்ணரசே
அந்த அரிவயரை கொண்டுவந்து
அருஞ்சிறையில் வைக்கிறது
ஆகாது உந்தனுக்கு
அடர்ந்த இலங்கைநகர்
அழிந்துவிடும் அண்ணரசே

(247)

அந்த அரிவையரை விட்டுவிட்டால்
அனைவோரும் வாழ்ந்திருப்போம்
ஆகமனு நீதியுடன்

ஆண்டுகொண்டு தானிருந்து
ஆங்கார வலுமையினால்
அறுவயரை கொண்டுவந்தாய்

(248)

அரசுக்கு நீதியல்லா
அறிந்துபா ரென்றுசொல்லி
அனேக விதமாக
அவர்தடுத்து சொல்லையிலே
ஆண்மையுடன் கேளாமல்
அவன்மடிந்த டாவனைபோல்

(249)

அந்தஅமரரிடம் போவேனென்று
ஆண்மையுடன் நீயுரைத்தாய்
ஆபத்து வந்துவிடும்
அழகு சிகாமணியே
அடியாளுக் கென்னவழி
ஆதரவு சொல்லுமென்று

(250)

அன்பாக தானுரைத்தாள்
அந்தஆரணங்கு பெணைரதியாள்
அந்தமொழி கேட்டு
அனங்கா ராஜேந்திரனும்
அந்தஅமரர் லோகம்போக
அன்புடனே தானெழுந்து

(251)

அடிவணங்கும் சேனைகளை
அடவாகத் தானழைத்து
ஆயுத முஸ்தீப்பு

(252)

அதிசீக்கிரமாய் கட்டுமென்றார்
அந்தப் படிக்கே
அதிக பயமுடனே
அக்ஷணமே சேனைகளும்
அறையில்கச்சை தானணிந்து
அங்குசங்கு பேரிசமும்

(253)

அணிமுகப் புட்கையும்
அழையில் சமுதாயம்
அதக்கிசைந்த கேடையமும்
அதுவிற் பட்டாவும்
அதுசுருக்கு அம்புகளும்
அதுவிர் வெண்குடையமும்

(254)

அதுக்கிசைந்த சக்கரமும்
அறுத்தெரியும் நேரிஷமும்
அந்திமுகப் பட்டாவும்
அஷ்டகோணத் தடியும்
அருகட்டி வில்லியமும்
அக்ரமித்திதான் நிணிக்கும்

(255)

அருகண்ட கோடாலி
அறைலுடவாள் பாங்கு
ஆகபதி னெட்டுடனே
அன்புடனே தானெடுத்து
அனைவோரும் வந்துமிற்க
அப்போது மன்மதரும்

(256)

அழகு வசந்தனுடன்
அழதுதென்ற ரதமேறி
அன்னக் கிளிபூண்டு
அழுரம்பை சேனையுடன்
அண்டாண்டம் தத்தளிக்க
அணந்த ராஜேந்திரனும்

(257)

அந்த அமரலோகம் தானடக்க
அப்போ நடக்கையிலே
ஆகாசதுணை யெதிர்
ஆகுதிகாண் மன்மதற்கு
காகங் கலங்கி
கதரிப்புலப்புது காண்

(258)
ஒறி அழுதிடுமாம்
ஒர்திவலம் வந்திடுமாம்
கொள்ளிவாய் பேய்க்களெல்லாம்
கூத்தாடி நின்றிடுமாம்
அக்கினி எதிராக
அழுதகுறள் முன்னை

(259)
ஆண்பூனை குருக்காக
அண்ட கெருடனார்
அதிகுருகே காட்டிடுமாம்
ஆந்தை ஒருகுரல்கள்
அழுது புலம்பிடுமாம்
ஆகாத சகுனங்கள்

(260)
ஆயன்மகன் கண்டு
அஞ்சி மிகப்பயந்து
ஆயாசம் தானாகி
அருவை தெரிந்த
அழகுராதி கிளியும்
ஆகாது என்றுசொன்னான்

(261)
அவள் வர்த்தை கேளாமல்
அமறறிட வார்த்தை
அழியாமல் யானிசைத்தி
அதிசீக்கிற மாகவந்தேன்
ஆசையினா லெந்தனுக்கு
அவசகுணம் உண்டாச்சு

(262)
அந்தபதி கடந்து
அயர்லோகம் போகையிலே
ஆடலுக்கு தானிசைந்து
அநேகப்பேர் ரம்மையர்கள்
அநேக நமஸ்காரம் செய்து
அவரெதிரே ஓடிவந்து

(263)

[மன்மதன் தெய்வலோகம் போகிறது.]

அழைத்துவந்தார் மன்மதரை
அங்கே சிலநேரம்
ஆயாசம்தான் தீர்த்து
அப்பாகன் தெண்டனிட்டு
அழைத்ததொரு காரியங்கள்

(264)

அறிய உரையுமென்றால்
ஆயன் மகன் மன்மதரும்
அப்போது இந்திரரும
அமரர்களுமேது சொல்வார்
ஆயன் மகனே
அழகுள்ள மன்மதனே

(265)

அழைத்ததொரு சேதி
அறியவே சொல்லுகிறோம்
ஆதிசிவன் தபசில்
அகோரமாய் இருப்பதனால்
அண்டசத்து சாகரமும்
அதிலுள்ள ஜீவசெந்து

(266)

அண்டமுடி போகாமல்
அலர்த்தும்வந்து சேர்ந்ததென்று
அஞ்சிவந்தாய் ஆகையினால்
அறன்ரபசை தானழிக்க
ஆருலேயாகு மென்று
ஆலோசனை புரிந்து

(267)

ஆரார் மருமகனால்
ஆகுமென்று தானுவிட்டோம்
ஆகையினா லுன்மை
அழைப்பித்தோ மிப்போது
அமரர் பயந்தவிர்க்க
ஐந்துகணை தொடுத்தால்

(268)

அரன் தபசு அழிந்துவிடும்
அண்டங் குளிர்ந்துவிடும்
ஆபத்து நீங்கிவிடும்
அன்பாய்மனதில் வைத்து
ஆதரிக்க வேணுமென்று
அனைவோரும் தெண்டனிட்டு

(269)

அங்கசனுர் தான்கேட்டு
அதுசேதி தானறிந்து
அதிக தயவாகி
அப்படியே நல்லதென்று
அன்பாக தானுரைத்தார்
அழகுமணி மன்மதரும்

(270)

[மன்மதர் கணை தொடுப்பது]

வானவரும் இந்திரரும்
மனது மிக மகிழ
மன்மதன ராஜேந்திரனுர்
வஜ்ஜிர தென்றல் தேரேறி
மயங்கு கணைபிடித்து

(271)

முன்படை தான்சூழ
வாத்தியங்கள் தான் முழங்க
மணவசந்தம் தான்வீச
வலங்கார மாக
வானவர்கள் பிரமிக்க
வண்மையுடன் வில் வளைந்து

(272)

வலுமை எமனைப்போல்
மனதில் பெருங்கோபம்
மகாதேவர் தானிருக்கும்
வழிகளிட மெங்கேயென்று
மகா உக்கிர காரமுடன்
வந்து இடந்தேடி

(273)

மகாதேவர் தம்மை
மனதில்மிக தான்பார்த்து
மகாவீரக் தான்பிரந்து
இந்திரகிரி நடந்து
இசையான ரத்தினத்தால்
இழைத்த கிரீகடம்தரித்து

(274)

எங்கும் பதறிவர
யிடுக்கம்செய் அசுரர்களும்
எங்கே கண்டோடிவிட
யெதுத்துமதம் பேசுவதே
யீடழிந்து தானேடே
யிழுத்து ரதம் நடக்கும்

(275)

ஈரெட்டு புறவிகளும்
வண்ணமல் கெற்சிதமாய்
இழுத்து ரதம்நடக்க
எங்கங்கே என்றுமதன்
இடைச்சிமுன்னே தானேசி
எட்டிக் குதித்ததுபோல்

(276)

இந்திரபல தேவரிடம்
இலபமொழி தானணிந்து
இந்திர விருதணிந்து
இனியில்லா ரத்தினங்கள்
எங்கும் பறவிவர
ஈசர் தலத்தருயில்

(277)

எதிராகபோய் நின்று
இன்பமாய் புஷ்பபாணம்
எடுத்தோங்கி யெய்துவிட்டான்
அதுயீசர் முடிமீதில்
இனியமலர் பட்டவுடன்
ஈசர் கண்விழித்திருக்க
எறிந்துவிட்டார் மன்மதரும்

(278)

[ரதிதேவி கனவு காணுதல்.]

அபாஞ்சியா விழைத்த
 அழகுமணி ஊஞ்சல்தனில்
அன்னப் பசுங்கிளிபோல்
 அழகுரதி தேவியரும்
ஆரூட்ட சொற்பனமாய்

(279)

அதட்டி புதுமைகண்டு
 அவள் அலரி எழுந்திருந்து
அங்கம் தடுமாறி
 அன்புலன்கள் தாமொடுங்கி
அடியவர்கள் தான்கலங்கி
 அருவிழிகள் மூத்துதிர

(280)

ஆயாசம் தானுகி
 அதட்டிசொல் மெய்மறந்து
அருகிருக்கும் பாங்கிகளே
 அடி அருவையரே தாதிகளே
அனந்தனிலே கண்டகினு
 அதுவுத்தது கேளுமென்முன்

(281)

அழகு சிகாமணியே
 அற்புத சிங்காரவனம்
அதியெறிய கண்டனடி
 ஆரோக்கிய புரமதிலும்
அழகுமணி கோபுரமும்
 அதியிடிய கண்டேனடி

(282)

ஆசாரவாசல் முன்னே
 அயிரூ பதத்தானே
அலதிவிழ கண்டேனடி
 அரசு மணிக்கொடிகள்
அத்தவிழக் கண்டனடி
 ஆபரணங்க ளெல்லாம்

(283)
அனல்பரக்க கண்டனடி
அழுதுபெறு மாலைகளும்
அறந்துவிழ கண்டனடி
அழகுமஞ்சள் பூசாமல்
அங்குகூந்தலை தொங்கவிட்டு
அந்தஅலறி செவ்வலரி

(284)
அதுமுடிய கண்டனடி
அன்னக்கோட்டி வாளிமுதல்
அஞ்சடுக்கு பூஷணமும்
அதுகழட்ட கண்டனென்றாள்
அவில்விருக்ஷ!மெல்லாம்
அதுமூறிய கண்டனடி

(285)
அஷ்டதிசை யோர்புகழும்
அபரஞ்சி தாலியது
அற்றுவிழ கண்டனடி
ஆடையிலே தீபட்டு
அதுபுகைய கண்டேனடி
அகத்தில் இருக்கும் தீபம்

(286)
அதுபுகைய கண்டனடி
ஆகாத சொற்பனங்கள்
அனேகவிதம் கண்டனடி
அந்த அனங்காரஜேந்திரனை
அனேக விதம்சொல்லி
அறியாள் மிகதடுத்தேன்

(287)
அடியாள்சொல் கேளாமல்
அழகுதென்றல் தேரேரி
அன்பாய் வசந்தனுடன்
அருமைவரம்பை சேனையுடன்
ஐந்து மலர் பாணம்
அழகுடனே தானேந்தி

(288)

அமரலோகம் போனவர்க்கு
அதிசயங்க ளுண்டோதான்
ஆகாதகினவு கண்டேன்
ஆரங்கு தாதிகளே
அதிரூபா சித்தழகி
அன்னக் கிளியாளும்

(289)

அமிர்தப் பசுங்கிளியும்
அழகுதிரு மாமயிலும்
அவளங்கம் குலுங்க
அருக்கதுபோல் நீர்சொரிய
அழுதுகொண் டேயுரைப்பாள்
அந்தஅலைகடலில் தான்முழிலும்

(290)

ஆயன்மகன் மன்மதரும்
அண்டரிட சொல்கேட்டு
ஐந்துமலர் பாணம்
அரனார்மேல் தான்விடவே
அப்போ அய்யரதுபார்த்து
அவ்வலரி கண்திறந்து
அனலா யெறித்ததுபோல்
ஆரணங்கே கண்டனடி
அன்புள்ள தாதிகளோ

(291)

[ரதிக்கு தாதிகள் சொல்லல்.]

மணமிசைந்த தாதிகளும்
மங்கையரும் தான்பார்த்து
மறுவார்த்தை யேதுசொல்வார்
மாயன் மகளுனை

(292)

மன்மதற்கு ஒன்றுமில்லை
மங்கைரதி கண்டிடுவாய்
மன்மதற்கு காட்டாது
மகராசி கண்டிடுவாய்

(293)
மரும்புவியில் சாக்குவிட்டும்
மண்ணுழி காலமட்டும்
மன்மதற்கு ஒன்றுமில்லை
மஞ்சள் குளியுமம்மா
வசந்த நீருமேமம்மா
மகாதேவர் ஈசருக்கு

(294)
மருமகன்தான் உன்புருஷன்
மருமகளைத் தானெறிக்க
ஈசருக்கு மதிகெட்டு போய்விடுமோ
மாயவனார் உன்மாமன்
மகிகபல மாயிருக்க
மாமி அலமேலுனக்கு

(295)
மகிழ்ச்சியுடன் தானிருக்க
மண இருதை வையாதே
மன்மதற்கு ஒன்றுமில்லை
மாதா உனையீன்ற
மயேஸ்வரியாள் உள்ளமட்டும்
மடிப்புவா போறதில்லை

(296)
மனக்கவலை கொள்ளாதே
மங்கைசதி பெண்ணமுர்தே
மல்லிகையும் முல்லிகையும்
மருக்கொழுந்தை சூடுமம்மா
மகிழான பெண்சதியே
மணங்கொடிக தாலுவைக்க

(297)
மகிழ்வாயிருந்தான் காண்
மங்கைகாதி தேவியரே
ஆகாச வாணியம்பாள்
ஆகாதவார்த்தை சொல்வாள்
கரியதிருமால் முகுத்தன்
காசாம்பு மேனியவன்

(298)

கஞ்சனை வதைத்ததொரு
கமலவிழி கிருஷ்ணனும்
காளைவில் விஜயனுக்கு
கனைத்ததொரு மைத்துனன்காண்
கனத்தமகா பாரதத்தில்
கடுகெனவே சாரதியாய்

(299)

களரியிடும் போர்களத்தில்
கதிவேக மாக
கடுகெனவே போய்நின்று
கஞ்ச ரதக்காரர்கள் மேல்
கடும்போர் சமர்புரிய
காளை துரியோதினனும்

(300)

கனைத்தபடை தான்கூட்டி
கணையூகங் கட்டிவில்லை
கதிகுரு துரோணருக்கு
கனமகுடம் தான்சூட்டி
காளை அபிமன்னவன்மேல்
கனத்தசண்டை தான்புரிய

(301)

கடுகஅபி மன்னனுக்கு
கடுங்கோபந் தானுகி
கனத்தவில் துரோணரையும்
கர்ணன்முதல் யாவரையும்
கால்நடையாய்த் தானோட
கஞ்சரத்தால் தானடித்து

(302)

கனத்த சக்ராயுதத்தை
கடுகெனவே தானுடைத்து
கடும்புலிபோல் யுள்புகுந்து
கனைத்ததொரு லக்குணனை
கனமாக தான்வெட்ட
கண்டான்காண் அப்பொழுது

(303)

காளை திரியோதிரனும்
கனத்தச் சயிந்திரனை
கடுகெனவே போயி
கருத்துடனே தானழைத்து
காலகண்டன் தானளித்த
கடுங்கொன்னை மாலையதை

(304)

கனமாகத் தான்போட்டு
கடுந்தண்டினால் அடிக்க
காளை அபி மன்னவனும்
கைலாசம் சேரவைத்த
கமலக்கண்ணன் புதல்வன்
கரும்புவில்லை தானெடுத்து

(305)

காலகண்ட ஈஸ்பரன்மேல்
கணைதொடுக்க ஈஸ்பரரும்
கண்திறக்க மன்மதனார்
கனலாக தானெரிந்தார்
கடுக அந்திரவாணி
கடுகவந்து சொல்லலுற்றாள்

(306)

கன்னிரதி பெண்தனக்கு
ஆயிரங்கண் இந்திரனார்
அவர்சொல் தடுக்காமல்
ஐந்துமலர் பாணமதால்
அவர்மேல் கணைதொடுக்க
அக்கினி கண்திறக்க

(307)

அழகுள்ள மன்மதரும்
அனலா யெரிந்துவிட்டார்
அண்டர்முனி தேவரெல்லாம்
ஆயாசம் ஆனார்கள்
ஆயிரம் சோதியுள்ள
அந்திரத்து சூரியரும்

(308)

அவர்தேர் கடத்தாமல்
அஞ்சிமிக நின்றுவிட்டார்
ஆகாச வீதியெல்லாம்
அழுது புலம்புறதை
ஆகாச வாணியரும
அவஸ்தையை பாராமல்

(309)

ஆரோக்கியா புரத்தில்
அழகு வேதியருக்கு
அரிக்கை வேணுமென்று
அர்த்தராத்ரி வேளைதனில்
அசரத வாக்கியமாய்
அன்ன ரதியாளே

(310)

அழகான உன்கணவன்
அரனுர் விழியதினுர்
அங்கசவேன் மன்மதனும்
அனலாய் எறித்தாண்டி
அண்டர்முனி தேவர்களால்
ஆபத்து வந்திதன்று

(311)

அறிக்கையிட்டார் அன்னேரம்
அழகுரதி தேவியர்க்கு
டன்பான ஆரோக்கியபுரம்
டலங்கார ஊஞ்சல்தனில்
டப்யவர் ரதிக்கிளியாள்
டலங்கார மாளிகையில்

(312)

டாகாசவாணி வந்து
டஞ்சிதமே பெண்ரதியே
டனங்கா ராஜேந்திரனும்
டழகான வில்தொடுக்க
டனலா எறித்துவிட்டார்
டமடிவத்து சேர்ந்ததென்று

(313)

டந்தபெண்ணுள் ரதிக்கு
டங்கே யுறைக்கவே
டங்கே திடுக்கிட்டு
டங்கே மனங்கலங்கி
டதிகமுள்ள பெண்ரதியும்
டருகிருக்கும் பாங்கிகளே

(314)

டருந்திரோ தாதிகளே
டன்பான மன்மதரும்
டங்குதென்றல் தேரேறி
டணிமகரக் கொடி பறக்க
டஞ்சிமுக பட்டாவும்
டக்கைபிடி பாங்குகளும்

(315)

டணிவாளும் சக்கரமும்
டாயுத மெலாந்தறித்து
டந்தப் பிரகாசமுடன்
டகடகனவே சிரித்து
டம்புவில்லை கைபிடித்து
டனமாய் வசந்தனுடன்

(316)

டாடுகின்ற வஞ்சியுடன்
டழகாக போகையிலே
டான்மறித்து சொல்லையிலே
டழகுள்ள! மன்மதரும்
டவிகிவந்து நேர்ந்ததென்ன
டன்பான தாதிகளே

(317)

[ரதிதேவி புலம்பல்.]

மாயன் மகனாரும்
மன்மதரும் போனபின்பு
மஞ்சள் குளிக்கவும் நான்
மறந்தேனே யிந்நேரம்
உன்னைப் பறிகொடுத்து

(318)
ஒழிந்திருக்க ஞாயமுண்டோ
புண்ணியனே பர்த்தாவே
புண்ணியனே கர்த்தாவே
போகவுந்தா நீதியுண்டோ
கூடி கலந்திருக்க
கொம்பனையாள் பெண்சதியும்

(319)
வாடிமுகம் சோர்ந்து
மயக்கம்வந்து போனீரோ
மனைமாட்டி சொல்லை
மனதிலெண்ணி பாராமல்
மகாஜனங்கள் பார்க்க
மண்மேல் பிறளவைத்தீர்

(320)
மன்மதரே என்சுவாமி
கூலி குறைத்தேனோ
குறைமரக்கால் போட்டேனோ
பட்டையின் நெல்லிலே
பதரைக் கலந்தேனோ
பத்தாவின சாமர்த்தை

(321)
பதரி வுறைத்தேனோ
வந்த விருந்திருக்க
வஞ்சித்து உண்டேனோ
அவதி பரதேசிகளை
அடைத்துவைத்து உண்டேனோ
பூமுடிக்கும் கோவிலுக்கு

(322)
பூழி படைத்தேனோ
பிரமன் தலைவிதியோ
புரந்திரனார் சொல்கேட்டு
போய்மான நீதியுண்டோ
புத்தியுள்ள என்கணவா
புலம்பியே தானழுதாள்

(323)

பூவைசகி தேவியரும்
காமனுர் தேவியரும்
கன்னி ரதிக்கிளியாள்
கதறி எழுந்திருந்து
கண்திறந்து தான்பார்த்து
கருத்துள்ள பாங்கிகளே

(324)

கன்னிபடை மங்கைகளே
கனமான தாதிகளே
கண்ணுள மன்மதனை
கண்டழைத்து வாங்களடி
கரும்பு சிலைபிடித்த
கனகதிரு மண்டபத்தில்

(325)

காமன் கொலுவிருக்க
கண்டீரோ பெண்மயிலே
கண்ணுயிரம் படைத்த
காவலனுர் தன்சபையில்
கனத்த கொலுவிருக்க
கண்டதுண்டோ மன்மதனை

(326)

கன்னி யிளங்குயிலே
கருத்தழிந்து வாடுரேனே
கார்மேக வண்ணகளே
கனமான அரோக்யாபுரம்
கனகமணி மண்டபத்தில்
கனகரத்ன சிம்மாதனத்தில்

(327)

காமப் பசுங்கிளியே
கண்டீரோ மன்மதனை
கைசோர்ந்து மெய்சோர்ந்து
கன்னிரதி தேவியரும்
கனத்த பணிதியெல்லாம்
கழட்டி மிக தானெறிந்து

(328)

காட்டிலுள்ள பக்ஷிகளே
கானகத்து வேங்கைகளே
கரடிபுலி ஆனைகளே
கனத்தசிங்கம் யாளிகளே
கண்டதுண்டோ மன்மதனை
கடம்பை யிளமானே

(329)

காட்டகத்து தேவதையே
கறிவகை நற்கிளியே
காடைபுறா இனமே
கணக்கில்லா பக்ஷிகளே
கன்னிபடிங் கோகிலமே
கண்டீரோ மன்மதனை

(330)

கண்டதுண்டோ இந்தவழி
கண்ணிலும் காணலையோ
கருத்தாக ஆராய்ந்து
காமனெரிந்த விடம்
கண்டுங்கப் பிறண்டு
கதறி அழுகலுற்றாள்

(331)

கருத்த முகலிகளே
கருப்பண்ண சுவாமிகளே
யெண்ணமெத்த பாப்பான்
யெழுத்தறிய வன்னியரே
கட்டைப் படைகளே
கொத்தளத்து சேவகரே

(332)

பழங்கோட்டை பாண்டியரே
புதுக்கோட்டை புண்ணியரே
நீங்களுள்ள காலையிலே
பொன்னின் குடமும்வரும்
பொக்கிஷமும் தான்வருமே
நீங்கள்போன காலையில்

(333)

பொன்னின் குடமுடையாள்
பொக்கிஷத்துக் கதிகாரி
நான்புலம்பி தவிக்குறண்டா
புண்ணியனே யென்பிறவி
மாணத்தின் மீனே
மறகதமே ஆணிமுத்தே

(334)

கோமேதக முத்தே
கொடுங்கை நவரத்தினமே
செவ்வலரி பூவே
செந்தா மறிக்கொழுந்தே
பன்னிறுவாக்ஷி முல்லை
பகல்திரு மண்டபத்தில்

(335)

படுத்திருந்த என்கணவன்
பார்த்ததுண்டோ உங்கள்
பரிமள சோலையிலே
மயிலே குயிலெனமே
மாடப்புரு யினமே
யென்மன்மதனை கண்டதுண்டோ

(336)

உங்கள் மாமரத்தின் சோலையிலே
தானே புலம்பியவள்
தரையில் புறண்டழுதாள்
தையல்ரதி அன்னேரம்
காமனெறிந்த விடம்
கடுஞ்சேதி தானறிந்து

(337)

கன்னிரதி தேவியரும்
காயம்பட்டமானது போல்
கனத்தழுடி சோர்ந்து
கலங்கிமிக தானெழுந்து
கண்ணுள மன்மதரே
கருத்தாய் பிகதடுத்தேன்

(338)

கண்டுமணம் நில்லாமல்
 கண்ணுயிரம் படைத்த
காவலர்தன் சொல்கேட்டு
 கங்காதரன் தபசில்
கனலாய் எரிந்துவிட்ட
 காரணத்தைக் கென்னசெய்வேன்

(339)

கனமான பிர்மாவும்
 கணக்கில் குறைந்தாரோ
காமரச மோகனமே
 கருத்துள்ள மந்திரியே
கருங்தென்றல் தேரேறி
 கரும்புகணை பிடித்து

(340)

கருவண்டு நாணிதொட்டு
 கணமாய் வசந்தனுடன்
கன்னி படையுடனே
 கடிவர காண்பதெப்போ
எனக்காதரவு சொல்வாமல்
 கண்கள் கலங்கிவிட்டு

(341)

கால்நாழிகைப் பொழுதில்
 கடிசாக மாண்டதென்ன
கன்னியிளம் வயதில்
 கணவனை பறிகொடுக்க
கற்பனையோ யானறியேன்
 கார்மேக வர்ணனும்

(342)

கணமாக மீண்டெடுத்த
 கண்மணியே என்கணவா
ஆரோக்யா புரத்தில்
 அழகு சிம்மாதனத்தில்
அமர்ந்தரசு ஆளாமல்
 அண்டர் முனிராசரும்

(343)
ஆயிரங்கண் யிந்திரனும்
அனுப்பினர் தூதுவனை
அதையறிந்து வாரனடி
நீஅழுது புலம்பாதே
அகமகிழ்வு சொல்லாதே
அகமகிழ்ந்து வார்த்தைசொல்லி

(344)
அழகுதென்றல் தேரேறி
அழகு வசந்தனுடன்
அறிவைரம்பை சேனையுடன்
ஐந்துகணை தான்பிடித்து
அன்றகொடியில் வாறனடி
அமரர்சொல் தட்டாமல்

(345)
ஆதிசிவன்முன் போயி
அதமாய் மடிந்ததென்ன
ஆரிட்ட சாபமோதான்
அடியாள் தலைவிதியோ
ஆதிசிவன் கற்பனையோ
அயனெழுத்திதுவோ

(346)
அண்டர்முனி தேவர்செய்த
அபகேடுக்கென்ன சொல்வேன்
ஆகாச வாணியரும்
அறிந்தாயோ என்தாயே
அண்டயிட மில்லாமல்
அம்பலத்தில் விட்டதென்ன

(347)
அழகுதுரை என்சுவாமி
அடியாளுக் கென்னவழி
ஆரைப்போய் வேண்டிடுவேன்
அழகுதுரை ரத்தினமே
அன்பான காதலரே
அனேக விதமாக

(348)

ஆகாது என்றுசொன்னேன்
ஆக்கரித்து கேளாமல்
அனலா யெரிந்தாரோ
ஆதரவு சொல்லுமென்று
அடித்துப் பிரண்டழுதாள்
அன்னாதி தேவியரும்

(349)

சந்திர சூரியர்கள்
தான்குவித்த மண்டபத்தில்
சகல சிவசெந்துக்களும்
தழைக்கும் படியாக
சயின்ற மோகனரே
சரியாக யுண்டுபண்ணி

(350)

தாயும் தகப்பனுமாய்
தந்திரங்கள் மன்மதற்கு
சாம்பசதா சிவனே
சங்கரனே என்தகப்பா
சங்கீத வாசகனே
சாம்பலாய் நீயெரிக்க

(351)

சாபமுண்டோ மன்மதற்கு
சதியென்ன சொல்லுமையா
சாபமுண்டோ ஆரோக்கியபுரம்
சங்கையில்லை என்றிருந்தேன்
சம்பங்கி வாசகரே
சதிசெய்தார் தேவரெல்லாம்
இனிசகிப்பேனோ பெண்ணாம்

(352)

[ரதிதேவி தாதியுடன் புலம்பல்,]

அண்கூடயிலே தானிருக்கும்
அன்பான பாங்கிகளே
அடி அறிவயரோ தாதிகளே
அதிசயத்தை என்னசொல்வேன்

(353)
ஆதிமுன் ஞானியிலே
அன்பாக நான்வளர்ந்து
ஆயன்மகன் மன்மதற்கு
அழகான பெண்ரதியும்
அவருக்கே பாரியென்று
ஆதிசிவன் என்தகப்பன்

(354)
அன்பாக பேறுமிட்டு
அழகாய் வளர்த்திடவே
ஆயனும் லக்ஷிமியும்
அமராபதி முனிவர்
ஆதிசிவன் முன்பாக
அனைவோரும் வந்துநின்று

(355)
என்மாமன் கோபாலன்
எதிரைத்தார் அப்போது
லமைத்துனரே உன்மகனே
என்மகளுக்கு தாருமென்று
மகிழ்ச்சியாய் தான்கேழ்க்க
மகாதேவர் என்தகப்பன்

(356)
மாதுபா மேஸ்வரியும்
மாயோனும் மங்கையரும்
மகள்ரதியை கேழ்க்குரார்கள்
உன்மனதுக்கு சம்மதியோ
மர்மத்தை சொல்லுமென்று
மயேஸ்பரனுர் தான்கேழ்க்க

(357)
மாதுமையாள் எப்பொழுது
மனமகிழ்ந்து எதுரைப்பாள்
உம்மிட் மனதுக்கு சரியானல்
மற்றவர்க்கு சரியென்று
மாதுமையாள் சொன்னபின்பு
மகாதேவர் என்தகப்பன்

(358)

மகிழ்ச்சியுடன் அந்தணரை
 வரவழைத்து யேதுசொல்வார்
மாதூரதி தேவியருக்கும்
 மன்மதற்கும் நான்பொருத்தம்
வையுமென்றார் அன்னேரம்
 மறையோதும் வேதியரும்

(359)

மாமுனிவர் யோகிகளும்
 மகாமுடி காரதரும்
பஞ்சாங்கம் தான்பார்த்து
 பலநூல்கள் சாஸ்திரத்தை
பரிவுடனே தான்குறித்து
 பூவைரதி மன்மதற்கும்

(360)

பொருத்த திதித்தமுதல்
 பேருக்கும் தான்பார்த்து
வடவால் விருக்ஷமட்டும்
 வழிசகுனம் தான்பார்த்து
வஞ்சிரதி தேவியரும்
 மன்மத ராஜனுக்கு

(361)

வயிராக்கம் இல்லையென்று
 வந்தசேனை யெல்லாம்
வாழ்த்திமிக சொல்லியிலே
 மகாதேவர் தாம்பூலம்
மாத்தும்மென்று தாமுரைத்தார்
 மாயனும் மங்கையரும்

(362)

மகிழ்ச்சியாய் தானெடுத்து
 மஞ்சாளும் தாம்பூலம்
மகாதேவர் கையில் கொடுத்தார்
 மகாதேவர் பார்வதியும்
மருக எழுந்திருந்து
 மாயவனே மங்கையரே

(363)
உன் மகனுக்கு என் மகளை
மகிழ்ந்து கொடுத்துவிட்டோம்
மறுபடியும் பிசக்கில்லை
மஞ்சாளும் தாம்பூலம்
மாயவனார் கைதனிலே
மகிகுஷியாய் தானளித்தார்

(364)
மணவரைப் பந்தல்களும்
மாணிக்க மேடைகளும்
வரிசையாய் தானமர்த்தி
வாருள்ள தேவரெல்லாம்
அழகாபுரிக் கிசைந்த
ஆரோக்கியா புரந்தனிலே

(365)
அணிமுகப்பு கோபுரமும்
அலங்கார மண்டபமும்
அதுக்கேத்த சாவடியும்
அங்கேமிக உண்டுபண்ணி
ஆணிமுத்து தோர்க்கையிலே
அலங்கார பந்தலிட்டு

(366)
பச்சை தடுக்குமிட்டு
பவழக்கால் தூண்நிறுத்தி
வச்சிரத்தால் நல்ல
விணைகள் மிகப்பரப்பி
வரிவரியாய் சித்திரங்கள்
வயிடூரி யத்தாலே

(367)
முத்துக்கால் நாட்டி
குருக்கே வளபரப்பி
கோமேத கத்தாலே
கொடுங்கைமிக நிறுத்தி
புஷ்பராக ரத்தினத்தால்
பூஞ்சரங்கள் உண்டுபண்ணி

(368)
நிலைபதி தனிலே
 நில்செவர்கள் உண்டுபண்ணி
ரத்தின சிம்மாதனங்கள்
 நன்றாக உண்டுபண்ணி
மயிலெழுதி குயிலெழுதி
 வர்ணக் கிளியெழுதி

(369)
அன்ன மெழுதி
 அதன்மேல் கிளியெழுதி
ஆளிசிங்கம் தானெழுதி
 அஞ்சுவர்ண சித்திரங்கள்
அமர்த்தினார் பந்தலுக்கு
 வாழை மரமும்

(370)
வர்ணமிலா மரமும்
 தேன்கமுகு தேக்கரச
சித்திரங்கள் பந்தலுக்கும்
 தெற்பையில் லு கணையால்
முருக்குடனே கட்டினார்
 பந்தலிலே தானும்

(371)
தூங்கா விளக்கேத்தி
 ஆச்சுது பந்தல்யென்று
அடித்தார்கள் பேரிகையை
 அப்போது எந்தகப்பன்
அமரர்களை தானழைத்து
 சத்தசாகர மெங்கும்

(372)
சதாசிவன் தன்மகட்கும்
 தங்கமணி மன்மதற்கும்
தனிமுகூர்த்தம் மென்றசொல்லி
 தாம்பூலம் வையுமென்று
சல்தியாய் எனையழைத்து
 சடக்கு நலங்கிட்டு

(373)
ஸ்தானங்கள் பண்ணைபின்பு
தலைமயிரை தானுத்தி
சடைகோதி பின்னலிட்டு
தங்கபிலாக் கடையும்
தனிக்குச்சு தொங்கவிட்டு
சந்திரபிறை சூரியபிறை

(374)
தன்னைகூட்டி மேல்கொலுசு
அன்னபக்ஷி அமுர்பக்ஷி
அதநடுவே கோகிலமும்
செத்திகட்டி பட்டமுடன்
நீலவான மையெழுதி
திக்காப்பு பொட்டுமிட்டு

(375)
காதுக் கிசைந்தொரு
கலசமுத்து கொப்புகளும்
கொப்பு நவரத்தினத்தால்
கிளிபொருடி மேல்முருகு
அஞ்சடுக்கு சூட்டி
அழகாக தொங்கவிட்டு

(376)
மூக்குத்தி சித்தாக்கு
முத்துகளும் தொங்கவிட்டு
கழுத்தில் சரப்பளியும்
கண்டசரம் தான்பூண்டு
காரை மிகப் பூட்டி
அல்லிக்காய் போலே

(377)
அமர்ந்த மூமச்சுகளும்
மூமச்சி தறித்ததொரு
மோகன மாலைகளும்
பவழமணி கோர்வைகளும்
தங்க கடகமும்
சரிகை வளையலுடன்

(378)

கங்கணமும் பூட்டி
 கைக்கிசைந்த பச்சைகளும்
கருத்தாய் அலங்கரித்து
 அரைக்கிசைந்த ஒட்டியாணம்
அன்பாக தான்பூட்டி
 பாதச் சிலம்பு

(379)

பாடகமும் தண்டைகளும்
 பதமாக தான்பூட்டி
காலின் விரல்களுக்கு
 கால்மிஞ்சி தானுமிட்டு
பஞ்சவர்ண பாவாடை
 பாங்காக தானுடுத்தி

(380)

பல்லக்கு மேல்வைத்து
 பரமசிவன் பார்வதியும்
பயணம் பயணமென்று
 தாதின்னம் ஆதுமென்றார்
பிர்மாவும் சரஸ்வதியும்
 பிரியமுடன் வந்தார்கள்

(381)

அமரர்க்கதி பதியோன்
 ஆயிரங்கண் இந்திரனும்
அயிராணி பார்வதியும்
 அன்பாக வந்தார்கள்
அஷ்டதிசை யிலரும்
 அனைவோரும் வந்தார்கள்

(382)

முப்பத்து முக்கோடி
 முனிவர் தபோதனரும்
நாற்பத் தெண்ணாயிரம்
 நவகோடி பிர்மாவும்
மகாமுடி நாரதரும்
 மல்லிகாம்பை ஊர்வசியும்

(383)
மங்களங்கள் தான் பாடி
மகிழ்ந்து நடக்கையிலே
பேரிகை கிடுகிடென்ன
பெரிய டம்பாரமுடன்
பூரிகை சின்னவும்
பெரியமத்தள முழங்க

(384)
நாக சுரங்கள்
நகாரமுடன் தானடிக்க
தம்பூரு வீணைகளும்
தனிமுரசு ஓசையிட
தாரைசின்னம் தானூத
தப்பட்டந் தான்முழங்க

(385)
வலம்புரி சங்கு
வரிசையுடன் அதிவர
பாணவெடி கிளம்பி
மத்தாப்பு தானெரிய
மகம்மேற் கிடுகிடென
வஞ்சியரை தான்நடத்தி

(386)
ஆரோக்கியா புரத்தில்
அன்னம் விளையாடும்
அழகுள்ள சோலையிலே
அனைவோரும் வந்திருக்க
ஆயனேறு மாயவனூர்
அதுசேதிதான் கேட்டு

(387)
சீக்கிரமாய் தானெழுந்து
சிங்கார வரிசைகளும்
சித்திரமாலை கொண்டுவந்து
வந்த ஜெனங்களுக்கு
வரிசையாய் தானமர்த்தி
எக்காளை வாத்தியங்கள்

(388)

எதிராக கொண்டுவேந்து
இன்பமாய் தான்நடத்தி
எல்லோரும் தான் கூடி
யேகினாகள் பந்தலுக்கு
ஆதிசிவன் என்தகப்பன்
ஆச்சது வேளையென்று

(389)

ஆரம்பம் செய்யுமென்றார்
அப்போது தேவர்களும்
அதிசீக்கிரமாய் செய்யுமென்றார்
சடங்கு முறைமைகளும்
சாஸ்திரமுடன் தான்முடித்து
அண்ணன் விநாயகனை

(390)

அப்போ பணிந்துவந்து
மன்மதரும் நாளும்
மணவரையில் உட்கார்ந்து
பஞ்சாங்க வேதியனார்
அவர்பண்ணும் சடங்குகளை
பண்ணிமிக வானபின்பு

(391)

என்னழகுள்ள மங்கிலியம்
அனைவோரும் தான்தொட்டு
ஆசீர்வாதம் செய்தபின்பு
அழகுள்ள மன்மதனார்
அவர்கையில் தான்கொடுத்து
அந்தணர் ஆசீர்வாதம்செய்ய

(392)

அன்பாக கட்டுமென்றார்
அந்தப் படியே
அவர்தரித்தார் மங்கிலியம்
அனைவோரும் எழுந்திருந்து
அக்ஷதையும்தான் சொரிந்தார்
அதியா வரங்கொடுத்து

(393)
அவர் அவர்கள் தானடந்தார்
அந்தப்படி போலே
அமர்ந்திருந்து வாழ்கையிலே
அந்திர லோகமதில்
ஆரூர் தபசிருக்க
அசுரர்கள் உபத்திரத்தால்

(394)
அமரர் இடுக்கிட்டு
அனைவோரும் தான்கூடி
ஆதிசிவன் தபசை
அழிக்க நம்மாலாகாதென்று
என் அழகு துரைசாமியை
அழைப்பித்த காரணங்கள்

(395)
அன்று ஆசீர்வாதம் செய்தவர்கள்
அழிக்க வேணுமென்று
அனுப்பினார் தூதர்களை
அவர்களிட சொற்கேட்டு
அழைப்பித்த காரணங்கள்
அறிந்தவாரே னென்று

(396)
என்னை அனுப்பிவையுமென்று
அ்யனை தான்கேழ்க்க
அடியா ளடிபணிந்து
ஆகாது மன்னவனே
ஆரோக்கியா புசம்மும்
அழிந்துவிடும் என்புருஷா

(397)
அனைவோர் கைத்திடுவார்
அடியா ளுக் கென்னவழி
ஆதரிப்பார் ஆருமில்லை
அனேக விதமாயுரைத்தேன்
அதைதடுத்து நீர்போயி
அக்கினி முன்பாக

(398)

என்மன்மத சுவாமி
அனலாய் எறிந்துவிட்டார்
அடி ஆறணைக்கு தாதிகளே
ஆணிக்கனக் முத்தே
ஆயனார் யீன்றெடுத்த
அபாஞ்சியான முத்தே

(399)

அலைகடலில் வாழுமுத்தே
அற்புத சிங்காரமுத்தே
அருகு நனி யீன்றமுத்தே
அனைவோர்க்கு நல்லமுத்தே
அணிகிளை தாருயின் முத்தே
அழகுவிரு முத்தே

(400)

அலங்கார சிப்பிமுத்தே
ஆபரண கோர்வைமுத்தே
அம்மாமி பெற்றமுத்தே
ஆறமாய் கோர்த்தமுத்தே
ஆயன்தொடுத்த முத்தே
நீ அர்த அபாரிட சொல்கேட்டு

(401)

அழகுமுத்து தேவேந்தி
ஆறுமெதிரில்லை யென்று
அழகு வசந்தனுடன்
அருணைவரம்பை சேனையுடன்
ஆக்கிரத்து மோமல்
அரனார் கருணைபதி

(402)

அறியாத மூடரைப்போல்
அஞ்சாமல் கணைதொடுத்தாய்
அவர் அக்கினி கண்திறக்க
என்மன்மத சுவாமி நீ
அதமாய் மடிந்திதன்ன
ஆபரண முத்தே

(403)

எணக்காதரவு சொல்லுமென்று
அழுது புலம்பலுற்ருள்
அன்னாதி பெண்தயிலும்
மனுவுதரிக்கும் பச்சை
மாயவனூர் ஈன்றபச்சை
மகறமுடி தான் பச்சை

(404)

மார்பில் அணியும்பச்சை
மங்கையர்கள் நெத்திபச்சை
மணதில் மணந்தபச்சை
மணமுள்ளமான பச்சை
மணப்பா றவிக்கை பச்சை
மன்னர்முடிக்குப் பச்சை

(405)

மயில்வட்ட மானபச்சை
மணல்பந்தல் காலும்பச்சை
மலைமேல் இருந்தும்பச்சை
மதனகாமேஸ் புரத்தில்
மருந்தாய் அமர்ந்தபச்சை
மகிதள மெல்லாம்பச்சை

(406)

மதன சிங்காரபச்சை
மாரோக்கியா புரமதிலும்
மணிகோபுரமும் பச்சை
மாதிரமடை சேனைதப்பை
வசந்தமணி பச்சை
மகரக்கொடிகள் பச்சை

(4)7)

மருவதென்றல் தோன்றும்பச்சை
மாயக்கிளி பச்சை
மங்கைபெற்ற செல்வமே
மாந்தளிரன பச்சை
மாயமாய் வந்து
மகாதேவ் தன்மீதில்

(408)

மைய்யல்பச்சை யெய்ததினால்
மகாதேவர் தானெரித்தார்
மாலை பயணம்
மற்றொருநாள் ஆகாதோ
மாலைபச்சை தான்தரித்த
மைத்துனரே என்றழுதாள்

(409)

மங்கைரதி தேவியரும்
புஷ்பராகமே தரிக்க
புருஷ வசீகரமே
பூமிபாரம் தீர்க்கவந்த
புண்ணியனார் தன்மகனே
புஷ்பராகத் தன்னொளியே

(410)

புனுகுவசந்தல் குழம்பை
புனுகுபன்னீர் வாசனையே
புஷ்பராகமே யிழைத்த
புதுமையுள்ள ஆரோக்கியபுரம்
புண்ணியனே என்சுவாமி
புஷ்பராக மெத்தையிலே

(411)

புணர்ந்து யிருக்கையிலே
புத்திமதி மயங்கி
புஷ்பராக கொடிபறக்க
புத்தியுள்ள மந்திரியும்
பூவைரம்பை சேனையுடன்
பூங்கிளிகள் தேர்பூட்டி

(412)

புஷ்பராக தேரேறி
புரந்திரனார் சொல்கேட்டு
பூரிப்பாய் வந்திரோ
புன்சிரிப்பு கொண்டவிவன்
புதுமை யரியாமல்
புழுதிபட வெந்ததென்று

(413)

புஷ்பராகத் தன்னொளிவே
புலம்பியிட நீதியுண்டோ
பூவைரதி சொல்படியே
புத்தன் மகனாரே!
புஷ்பராக கண்மணியே
புத்தியுள்ள மந்திரியே

(414)

புண்ணியனே யென்றழுதாள்
பூவைரதி பெண்ணாளும்
வச்சிரமணி தரித்த
வசந்தமணி ஆரோக்யாபுரம்
வளரும் சிம்மாதனத்தில்
வச்சிர முடி தரித்து

(415)

வண்மையுடன் ஆலையிலே
வச்சிர கலசமுடன்
வர்ணக்கொடி பறக்க
வசந்தமணி மார்பன்
வச்சிரக்கால் மண்டபத்தில்
வச்சிராயுதம் படைத்த

(416)

வானவர்கோ யிந்திரனும்
வரவழைத்தார் தன்சபைக்கு
வச்சிர ஆரம்பூண்ட
வண்மையுள்ள ராஜேந்திரா
வருஞ்சேதி தன்னை
வகையறிய மாட்டாமல்

(417)

வச்சிரதென்றல் தேரேறி
வர்ணக்கிளி பூட்டி
வஜ்ஜிரமணிடாஸ் பறவை
வாக்குபொரு அம்புதொட்டு
வணங்கா முடியுடனே
வாருபட்டமே தரித்து

(418)
வாத முறைகூறி
வச்சிரகணை வில்பிடித்து
வனத்துப் பெரும்புலிபோல்
வந்தீரோ என்னரசே
வானவர்கள் எல்லார்க்கும்
வரமளிக்கும் ஈஸ்பரனார்

(419)
வஞ்சனையால் தானெரித்தார்
வச்சிரமணி தேருடனே
வாயுயிருக்கு திப்போ
வசந்தபொடி யானதென்ன
வகையெனக்கு சொல்லுமென்று
வாடியழுக ஆற்றுள்

(420)
வஞ்சிரதி தேவியரும்
கோமேதக பணிந்த
கொஞ்சும் கிளிநிதமே
கோமேதக ஒளியே
கொண்டல்வண்ணன் தன்மகனே
கொத்துபடா மாங்கனியே

(421)
கோமேதக மிழைத்த
கொலுவான ஆரோக்கியாபுரம்
கோதைரம்பை சேனையுடன்
கோமேதகம் பூண்ட
கொடிதேர் வசந்தனுடன்
கோமேதக மிழைத்த

(422)
கொலு சிம்மாதனத்தில்
கோமேதக முடிதரித்த
கோடிமனு தெண்டனிட
கொலுவிருக்க நீகண்டாய்
கோமன் மருமகனே
கொற்றவனார் இரதிரகும்

(423)

கொடுமைசெய்ய தூதவிட்டார்
கோமேதகக் கிளியே
கொடுமையே யென்கணவா
கோமேதக அரசே
கொடிவினைகள் செய்தாரே
இக்கொடுமைக்கு என்செய்வேன்

(424)

கொண்டுவந்து விட்டீர்கள்
கொடைகள்மிக பெற்றாரோ
கொற்றவனே என்றழுதாள்
கொஞ்சுங்கிளி பெண்ரதியும்
ரத்தின முடிதரித்து
ரத்தின குண்டலமணிந்து

(425)

ரத்தின பூஷணம்தரித்து
ரத்தின செங்கோல் பிடித்து
ரத்தின கலசமுடன்
ரத்தின ஆரோக்யாபுரம்
ரத்தினப் பிரகாசமுடன்
ரத்தினக் கொடிபறக்க

(426)

ரத்தினகலை மண்டமத்தில்
ரத்தின சிம்மாதனத்தில்
ரத்தின கொலுவிருக்க
ரண்டரங்கோ யிந்திரனும்
ரங்குள்ள தேவர்களும்
ரகசியமாய் தானழைக்க

(427)

ரத்தினமணி தேரேறி
ரத்தின கிளிபூட்டி
ரத்திஞங்கி சேனையுடன்
ரண்டரண்டம் தூள்பறக்க
ரங்கசங்கு பேரிசங்கள்
ரத்னகுப்பி டால்விருது

(428)

ரன்பாய் மிகவணிந்து
ரண்டர்சொல் தான்கேட்டு
ரதன்மேல் கணைதொடுக்க
ஞாயமுண்டோ என் சுவாமி
போகாதே என்று சொல்லி
பொற்கொடியாள் தானுரைக்க

(429)

பெண்புத்தி கேழ்ப்பதுண்டோ
போய்வருவே னென்று சொல்லி
பொங்கமுடன் அக்ஷணத்தில்
பொதிதென்றல் தேரேறி
புத்தியுள்ள மந்திரியும்
பூவைரம்பை சேனையுடன்

(430)

புத்தியாய் போனவுடன்
பூவரச யிந்திரனார்
புத்திகளை தான்கேட்டு
புண்ணியனார் என்தகப்பன்
பொறுமை தவத்தழிக்க
புஷ்பகணை தொடுத்தார்

(431)

பொங்கமவணிந்த சிவன்
புஷ்பகணை ஐந்தினையும்
பூமாலையாய் பூண்டு
புண்ணிய னருண்ணை
பிடிசாம்பலா யெறித்த
பிழைக்கேடுக் கென்னசெய்வேன்

(432)

என்றுபுலம்பி பரதவிக்தாள்
பூவைரதி அன்னேரம்
கர்ச்சிமதி ஒளிவாய்
கருவ்குழியில் யான்பிறந்து
கனபருவமான பின்பு
கணக்கில்லா தாதியுடன்

(433)

கலந்து விளையாடும்
கருவறியா சிறுவயதில்
காந்திதிரு மூர்த்திகளும்
கனகமுடி தேவர்களும்
கணமாக தான்கூடி
கரும்பை கணைபிடித்து

(434)

கண்மணிக்கே தாரேமென்று
கணக்கிட்டார் தேவரெல்லாம்
கங்கைமதி தரித்த
கங்காதரன் எந்தகப்பன்
கடுங்கோபம் தானாகி
காடெரிந்த பாவனைபோல்

(435)

கணலாய் எறித்துவிட்ட
காரணத்துக் கென்னசெய்வேன்
என்கன்னி தவம்குலைக்க
கார்த்திருந்தார் தேவரெல்லாம்
கண்கலங்க விட்டுஎனை
காம ராஜேந்திரனும்

(436)

கடுந்தனலாய் போவதற்கு
காரணத்துக் கென்னசெய்வேன்
கருத்தில் பிரபஞ்சமதை
கருத்தாக உண்டுபண்ணி
கடல்தனிலே பள்ளிகொள்ளும்
கருநீல மேனியனே

(437)

கருத்தில் அறியாமல்
கண்கள்கெட்டு நின்றீரோ
காரணமே என்மாமா
கமல மலர்தனிலே
காந்தியுடன் தானுதித்து
காமனை பெற்றதொரு

(438)

கருத்துள்ள என் மாமி
கருத்தழிந்தா நின்னையோ தான்
கருவுக்கணைக் கெழுதும்
கருத்துள்ள பிரமாவே
கணமயக்கம் வந்ததோ தான்
கணக்க சித்திராபுத்திரரே

(439)

கணக்காகவா அவர்க்கு
கற்பகஞ டாளுமந்த
கனத்த சிங்காரமுள்ள
கணமான இந்திரரே
கணங்கள் மிக பெத்தீரோ
கவுடமிக வுதைத்து

(440)

கருத்தாட சேதிசொல்லி
கலக்கமிட்ட தேவரெல்லாம்
காகுசிகளை பெத்தீரோ
கலைமிகுந்த மன்மதரே
காசாய்பு மேனியனே
சால்நாழிகைப் பொழுதில்

(441)

கங்கைமதி சூலத்து
கறும்புலித்தோல் சற்பமுடன்
காலகண்டன் தான்தரித்த
கடவுள் மயேஸ்பரனே
கர்த்தனே என்தகப்பா
என்னைகண்ணில் மூழுகவைத்தார்

(442)

நான்கலங்கி தவிக்குதனே
கலங்கிவிட்டேட ஞாமகில்
கலகமிட்ட தேவர்களும்
கருத்தழிந்து நின்றாரோ
காரிகையாள் என்னசெய்வேன்
காரணரே என்தகப்பா

(443)

[ரதிதேவி ஈஸ்பரிக்கு சொல்லல்.]

அடியாள் யெனையீன்ற
ஆத்தாள் சிவகாமி
அங்கையற்கண் பார்வதியே
ஆதிபரு பரியே
அன்பாக என்னை

(444)

அருளோடு அளித்தவளே
அண்டம் படியளக்கும்
அயிர்தகுணை என்தாயே
அன்பாக என்தகப்பன்
அருந்தபசு தானிருக்க
அண்டமுனி தேவரெல்லாம்

(445)

அண்ட யிடமில்லாமல்
அவர்கள் திடுக்கிட்டு
அவர்கள் மதிமயங்கி
ஆயிரங்கண் யிந்திரனும்
ஐந்துமுகப் பிர்மாவும்
ஆயன்மகன் நாரதரும்

(446)

அஷ்டதிக்க பாலகரும்
அனைவோரும் தான்கூடி
ஆலோசனை செய்ய
அப்போது ஆராலுமாகாது
ஆயன்மகன் மன்மதரால்
ஆகுமென்று தானெழுதி

(447)

அனுப்பிவைத்தார் தூதுவனை
என்அழகன் மன்மதற்கு
அவரோலை தானெழுதி
அதுசேதி தான்கேட்டு
ஆண்மையுள்ள அதுவர்க்கு
அடக்காயும் வெள்ளிலையும்

(448)

அவர்கையில் தான்கொடுத்து
ஆண்மையுடன் தேரேறி
அரனெதிரே வந்துநின்று
ஐந்துமலர் கணையால்
அரன்மீதிற் எய்துவிட்டார்
அவர் அருமைதனை எண்ணாமல்

(449)

ஆங்கார கோபமுடன்
அக்கினியாய் தானெரித்தார்
நீ அருகிருந்து பார்த்திருக்க
அருவுகெட்டு போனீயோதான்
அம்பலத்தில் நின்றுநான்
அழுது புலம்புவது
ஆகாது என்தாயே
அரன்மேல் பிரண்டழுதாள்
அன்னை ரதிதேவியரும்

(450)

[ரதிதேவி ஈஸ்பரியைப்பார்த்து புலம்பல்.]

ஈசன் தனக்குகந்த
யின்பமுள்ள பார்வதியே

(451)

கண்ணெடுத்துப் பார்த்து
கலங்கி ரதிதேவியரும்
கண்ணீர்மிக சொரிந்து
கதறிப்புலம்பி அவள்
அடியென்தாயே பார்வதியே
என்னையீன்றெடுத்த மாதாவே

(452)

அடி தாயிருக்க பெண்ணும்
தாலியழப்ப தண்டோ
மாதா எனக்கிருக்க
என் மங்கிலியம் போவதுண்டோ
நான்பெண்ணுள் புலம்புவது
பெற்றவளே நீதியுண்டோ

(453)

நான் அங்கங்கலங்கி
அழுகிறது மாதாவே
பொங்கோ கேலியோ
பூரிப்போ உந்தனுக்கு
உன்பொங்கு குலையாதோ
பூரிப்பு சாகாதோ

(454)

சங்கரனார் செத்தாரே
தாலி யறுக்காயோ
கூவென்ற சத்தம்
குவலயத்தில் கில்லாதோ
ஈசனார் செத்தாரென்று
யெங்கும் போராகோதோ

(455)

வெள்ளை புடவை
வெளுக்க உடுத்தாயோ
முண்டையென்று உன்னை
யிந்தவுலகம் சொல்லாதோ
அப்போ சந்தோஷமாக
தையல் இருப்பேனே

(456)

நான் இக்கற்ற பாவி
தெருவில் பரதேசி
யென்பரதேசி கோலத்தை
பார்ப்பாரெவரு முண்டோ
அய்யோ திருவுளமே
ஆதிபர மேஸ்பரியே

(457)

எனக்கு அண்டகிழலுமில்லை
ஆதரிப்பா ராருமில்லை
ஒண்டகிழலு மில்லை
ஒத்தாசை ஒருவரில்லை
குந்தியழுக திண்ணை
கூட்டங்கள் யாருமில்லை

(458)
ஒண்டியாய் என்னை
ஓசிவனே கர்த்தாவே
உற்பத்தி செய்தாயோ
உங்கள் எண்ணம்படி எனக்கு
எழுதிஎன்னை விட்டாரோ
எழுதினவன் கண்கெட்டு

(459)
எழுத்தாணி கூர்ஒடிய
எழுதினவன் தன்மனையாள்
என்னைப்போல் ஆகாளோ
என்றுபுலம்பி அவள்
ஏர்திழையா ளன்னேதம்
யிடி விழுந்த பாவனைபோல்
ஏங்கி புலம்பி
எண்ணமிட்டு தானழுதாள்
எளங்கிளியா ளன்தேம்

(460)
[லக்ஷிமி புலம்பல்.]
சித்திரமே தேனே
திங்களொளி கண்மணியே

(461)
திவ்விய மன்மதனே
திருச்சந்தி ராகுதனை
அன்றுசிறித்து எறித்தசிவன்
சிந்தையது மாறாமல்
சேதிதனை கேட்டவுடன்
திரோகமது அக்கினியால்

(462)
தீபத்தி வேகுதடா
சித்தசனே என்மகனே
சிவாத்தின மேனியனே
சிறந்திருக்கும் அங்கசனே
சிமைதனை ஆண்டு
சிந்தை மகிழ்ந்திருக்கும்

(463)

செல்வ சிகாமணியே
செங்கண்மால் கண்மணியே
சிவன்தபசை தானழித்து
செத்தனலாய் வெந்ததென்று
தீவினையை நானறியேன்
சித்தசவேள் கண்மணியே

(464)

விலையில்லா ரத்தினமே
வித்தைக் கதிபதியே
விருதுபெற்ற வென்மகனே
விஞ்சையர்கோன் தூதர்சொன்ன
விசேஷத்தை தான்கேட்டு
விசையாக தேர்நடத்தி

(465)

விண்ணுலகம் சென்ற அண்டர்
விரும்பி யுரைத்தமொழி
விருதாவாய் நீகேட்டு
விவர தபசழித்து
வெந்தாயோ வென்கண்மணியே
விண்ணும் மண்ணும் தானடுங்க

(466)

அரன் விழியால் எறித்தாரோ
வீரமுள்ள என்மகனே
ஆலிலைமேல் பள்ளிகொள்ளும்
ஆயனார் பெற்றெடுத்த
ஆனந்தவேள் மார்பா
என்னாவி அலயஅந்த

(467)

அவனிதனில் நான் அலைய
நீயும் ஆயிரங்கண் இந்திரனார்
ஆலோசனை யறிய
ஆனந்ததேர் நடத்தி
ஆண்மையினால் சென்ற
அழகுதுரை என்மகனே

(468)

அனலாய் எறிந்தாயோ
அடாரமகனே கண்மணியே
கரும்பைச் சிலையெடுத்து
கருவண்டால் நாணியிட்டு
கஞ்சமலர் சரத்தில்
கணையர்த்து பியத்து

(469)

கனக சபைமேலே
அண்ணி ரதியாளுடனே
கைகோர்த்து கொண்டுவர
கண்டு மகிழ்ந்தேனே
கருத்தை மிகவருத்தி
கண்டிட செய்தாயோ

(470)

காற்றில்பட்ட பக்ஷிபோல்
கண்கலங்கி வாடவுந்தான்
கண்ணுமெலரிய விதி
கற்பனையோ வென்று
கதறியழுக லுற்றாள்
கட்டழகி லக்ஷியம்

(471)

அதிகதவம் பெற்ற
அங்கசனே மன்மதனே
அப்பா மகனே
அழகுள்ள கண்மணியே
அண்டர்முனி தேவரிட
ஆசைவில்ல தனிலே

(472)

அகப்பட்டு உன்மாமன்
ஆதிசிவன் தபசை
ஐந்துமலர்க் கணையால்
அவர்மேல்கணை தொடுத்தாய்
இந்திரன் அழித்துவிடுவனென்றவுடன்
ஆயன்யெழுத்தை எண்ணி

(473)

ஆராய்ந்து பாராமல்
அதிவேக மாகவேதான்
அழகுதென்றல் தேரேறி
ஆலைசாகரை விட்டு
அரைநொடியில் என்மகனே
ஆரூர் திருவிழியில்

(474)

அகப்பட்டு செத்தனலாய்
ஆளுயோ கண்மணியே
அவனிதனில் நானழுதால்
அரும்பாவி ஞனென்று
யாவர்களும் என்னைசொல்லி
அவதிபட வந்தாயோ

(475)

அனலில்பட்ட மெழுகதுபோல்
என் அங்கம் உருகுதடா
தேவர்அமடுப்பு செய்ததென்ன
அறியாமல் மாண்டாயோ
ஆதரவு சொல்லாமல்
அருகில்வரக் காண்பதெப்போ

(476)

அன்னக் கஸ்தூரியமே
அழகுமணி மன்மதனே
அலரி அழுதுமிக
அடிவயிற்றில் தாணறைந்து
அடாமகனே யென்றழுதாள்
அன்னைமகா லக்ஷ்மியும்

(477)

வர்ணக்கிளி மொழியாள்
மங்கைமகா லக்ஷ்மிதன்
வயற்றில் அவதரித்து
பிந்தவையகத்திலே வளர்ந்து
மண்டலத்தே யாண்டு
வரிசையுடன நிற்காமல்

(478)

மண்டர்சொல் தான்கேட்டு
மயக்குகளை எடுத்து
வசந்தனுடன் தேரேறி
வல்லமையால் போனதொரு
வடிவுள்ள என்மகனே
வள்ளல் தபசையின்று

(479)

வலுமையினால் செயிப்பேனென்று
மகாதேவர் தனருந்தான்
மனதறிய மாட்டாமல்
வையகமெல்லாம் நடுங்க
மலர்கணையை தானெடுத்து
மாண்டாயோ என்மகனே

(480)

என்று-வயற்றி லறைந்துகொண்டு
வாடி அழுகலுற்றாள்
மங்கைமகா லக்ஷிமியும்
சாருத்தன் மீண்டெடுத்த
காமவேள் மன்மதனே
காவலனார் சொல்லாமலே

(481)

சுடுந்தணலாய் வெந்தாயோ
கஞ்சனவன் உன்தலையில்
கணைக்கெழுதி வைத்தானே
என்கண்ணன கண்மணியே
என்கருத்துக் குகந்தமுத்தே
கண்ணாளா யென்மகனே

(482)

உன்னைக்காணாமல் நானிருக்க
மனப்பிலையில் நிற்குமோதான்
கானகத்து வேங்கையொரு
காரணத்தினால் மடிந்து
கதைதயை யறியாயோ
கருத்தில் நினைத்தயெண்ணம்

(483)

கறையேதயில்லே அய்யோ
என்றுகதரிமிக தானழுதாள்
கருணைமகா லக்ஷிமியும்
அண்பிண்ட சராசரங்கள்
அதிலிருக்கும் தேவர்களும்
அகமகிழ்ந்து போற்றிடவும்

(484)

ஆரோக்கியா புறத்தை
ஆண்டிருக்கும் என்மகனே
அமரர்சபைக் கேகி
அவர்கள்சொல் தான்கேட்டு
ஆரன்மேல் கணைதொடுக்க
அதிகபல வானவனே

(485)

அழகுதென்றல் தேரேறி
அன்றாதியை விட்டு
அக்ஷணமே நீபோன
அச்சுதனார் புத்திரனே
அன்னை தனை யிந்த
அவனிதனில் விட்டேகிந்த

(486)

அரன்தபசை நீயழித்து
அவர்அக்கினிக் கண்ணாலே
அழிந்தாயோ என்மகனே
அழகொழுகு மங்கசனே
அண்டர் குகந்தவனே,
அம்பிகையாள் கண்மணியே

(487)

அழகு ரதிக்கிசைந்த
அன்பான ரத்தினமே
என்று அலரி அழுகலுற்றாள்
அன்னைமகா லக்ஷிமியும்
வசந்தனுடன் தேரேறி
வானவர்கள் சபைபோனா

(488)

வடிவுள்ள மன்மதனே
 வச்சிர முடி தறக்க
வானவர்கோன் தேவர்களும்
 மதிமோசம் பண்ணமொழி
மனதில்நீ எண்ணாமல்
 கடல் நஞ்சையுண்ட

(489)

கங்காதரன் றபசை
 கலைக்க என்னுபாகும்மெண்று
கரும்புவில்லை தானெடுத்து
 சமசமென்ற எய்தசிவன்
கண்ணில் அகப்பட்டு
 கடுர்தணலாய் வேகயெந்தன்

(490)

கன்னியர்கள் சாபமுண்டோ
 காதலனே என் மகனே
கலங்கி அழுகலுற்றாள்
 கருணை மகாலக்ஷிமியும்
அய்யோ விதிவசமோ
 அங்கசனே உந்தனுக்கு

(491)

ஆயனிட கற்பனையோ
 அஷ்டதிசை பாலகனே
அண்டம் படியளக்கும்
 அமரர்திரு நாயகனே
அரவயணி தானணியும்
 ஆண்டவன் சதாசிவனே

(492)

அன்பான உன் மருகன்
 அங்கசனை தானெழுப்ப
அனுக்கிரகம் செய்யுமையா
 அழகு ரதிதேவியற்கு
ஆபத்தை தீருமையா
 என் அங்கம் குளிர

(493)

அன்பாக தாருமையா
  அண்டமுதல் லெண்திசையில்
அதிலுள்ள ஜீவஜெந்து
  அனைவோர் தழைத்திருக்க
அங்கசனே தாருமையா
  யென்றழுது புலம்பி
ஆயன்திரு லக்ஷிமியும்
  அடிவணங்கி சொல்லி
அவளிருந்தாள் அன்னேரம்

(494)

[ரதிதேவி புலம்பல்.]

பளயாம படித்துறையும்
  பளிங்குமா மண்டபமும்

(495)

பாங்குள்ள சோலைகளும்
  பாரிஜாத மலரும்
பன்னீறு வாசமுடன்
  பரிமளிக்கும் சோலையிலே
நாணங்கே குளித்து
  மகாபூசை பண்ணயிலே

(496)

மாயன் சுருளோலை
  யென்மடியில் விழுந்ததடி
தங்கச் சுருளோலை
  தரையில் விழுந்ததடி
பொன்னூச் சுருளோலை
  பூமியில் விழுந்ததடி

(497)

இதுஆரோலை யென்றுசொல்லி
  ஆராய்ந்து பாராமல்
இதுஎவரோலை என்றுசொல்லி
  எடுத்தாள் பாராமல்
சித்தப்பன் ஓலையென்று
  சிரித்து விளையாடிருந்தேன்

(498)

பெரியப்பன் ஓலையென்று
 பெருமையாய் எண்ணிருந்தேன்
என்மாமனார் ஓலையென்று
 நான்பாவி சண்டாளி
மகிழ்ச்சியாய் நானிருந்தேன்
 மன்மதனார் ஓலையென்று

(499)

வந்ததடி நாதிகளே
 யென்றுமிக சொல்லி
தானேபுலம்பி யவள்
 தரையில் புரண்டழுதாள்
தையல் ரதிக்கிளியாள்
 சாம்பசிவன் மீதிலே

(500)

சரத்தொடுக்க போமெண்ணி
 சாம்பசிவன் தன்மீதில்
சரத்தொடுத்தார் இப்போது
 சரத்தொடுத்த பாணமது
தான்திரும்பி உன்மீதில்
 சந்தனக் கட்டையினால்

(501)

தனித்திருந்து வேகாமல்
 குங்கும கட்டையினால்
குமுகுவென்று வேகாமல்
 நெய்க்குடங்கள் தான்வீசி
நெருப்பா யெரியாமல்
 தொலைவை யிலனுலே

(502)

சுட்டெரிந்து போனீரோ
 பேக்கரும்பு செத்தையினால்
பிடிசாம்பலாய் போனீரோ
 காட்டு முட்டையாலே
கனிந்தனலாய் வெந்தீரோ
 ஓலக்கொத்து போட்டு

(503)
உடனே எரிந்தீரோ
உன்னைப் பறிகொடுத்து
ஒறித்திருக்க ஞாயமுண்டோ
மிந்தபெண்ணை தனியவிட்டு
போகவுந்தான் நீதியுண்டோ
வாடிமுகம் சோர்ந்து

(504)
மயங்கிவிட்டு போனீரோ
மனையாட்டி சொல்லை
மனதிலெண்ணி பாருமல்
மகாஜனங்கள் தான்பார்க்க
மண்மேல் பிராணவைத்தீர்
தேனை யெடுத்து

(505)
தின்னும் ருசிபாராமல்
வீணிலே நீர்போயி
வெந்தீரோ என்கணவா
நீபோவ தரிந்தால்
நான்பின்வாங்கேன் என்சுவாமி
நீசாவ தரித்தால்

(506)
தரிப்பேனே பூமியிலே
உன்முத்தான வாய்திறந்து
ஒருஉத்திரவு சொல்லாமல்
பொன்னான வாய்திறந்து
போய்வாரேன் என்றுமல்
இந்தபொற்கொடியாள் சிறையிருக்க

(507)
போய்மாண்டீரோ என்சுவாமி
புலம்பிமிக தானழுதாள்
பூவைாதி அன்னேரம்
ஆண்டிச்சி பெற்றெடுத்த
ஆணங்கு பெண்ணரிதியே
அன்பான நல்பாளர்

(508)

அவரிடத்தில் யோய்புலம்பி
அழவேண்டாம் என்மகளே
அழகு ரதிதேவியரே
அன்பான ஈஸ்பரரும்
அவரிடத்தில் நீபோக
அடுக்காது என்மகளே

(509)

அன்பாய் ஒருவார்த்தை
அடவாக சொல்லுகிறேன்
உங்கஅண்ணனார் தன்னிடத்தில்
அதுசேதி தானுரைத்தால்
அவராலே யாகுமென்று
அன்பாக தானுரைத்தாள்

(510)

அரனுமையாள் அந்நேரம்
அந்தமொழி கேட்டு
அழகுரதி தேவியரும்
அக்கினியாய் தானேர்த்த
அமரர் சபையிலே
அல்லவரும் பார்த்திருக்க

(511)

அருங்கழுத்து மாங்கிலியம்
அத்துவிழ பார்த்திர்களோ
அங்கம் குளிர்ந்ததோ
அழுகிறுவோ அண்ணுவே
அழுதுபுலம்பி ரதி
அரைநாழி நானிருக்கேன்

(512)

இப்போ அலகு அம்புநாட்டி
அழித்திடுவேன் என்னுயிரை
அன்பான என்தகப்பன்
ஆதிபர மேஸ்பரனார்
அவரிடத்தில் நீபோய்
அன்பான மங்கிலியம்

(513)

அதுபிச்சை தாருமென்று
அடவாக நீர்கேட்டு
அன்பாக வாங்கி
அனங்க ராஜேந்திரனே
அமைப்பிக்க வேணுமென்று
ஐங்கரனார் தாமிடத்தில்

(514)

அடித்த முறையமிட்டாள்
அழகு ரதிதேவியரும்
அழுது புலம்பாதே
அழகுமணி தங்கையரே
அரனார் தபசழிக்க
ஆராலும் ஆகாது

(515)

அப்படிக் கொற்றவரை
ஐக்கிணையாலே தான்
அவர்மேலும் உன்புருஷன்
அவரங்கம் பதறி
அகோர நெத்தி கண்திறக்க
ஆசையினால் உன்புருஷன்

(516)

அனலாய் எறிந்துவிட்டான்
ஆங்கார கோபமுடன்
அவர்கைலையிலே தானிருக்க
அவரிடத்தில் நான்போனால்
அடித்திடுவார் என்தகப்பன்
ஆகாது என்னாலே

(517)

அன்பான தங்கையரே
ஆனதொரு வார்த்தை
அடவாக சொல்கிறேன்கேள்
ஆயனார் உன்மாமன்
அவரிடத்தில் நீபோனால்
அரைக்ஷணத்தில் ஈஸ்பரனை

(518)
அங்கேகண்டு தான்பேசி
அங்கசனை தானெழுப்பி
அனுப்பிவைப்பா ரிப்பொழுது
அழவேண்டாம் என்பிரப்பே
அன்னமதி தேவியரே

(519)
[ரதிதேவி தகப்பனிடம் போகுதல்]
தாதியரே கேளுங்கள்
தகப்பனிடம் யான்போரேன்
தையலரே வாங்கடி
சுவாமியண்டை யான்போறேன்
தலைமயிரை தான்விரித்து
தானழுது வோடலுற்றாள்

(520)
தங்க ரதிதேவியரும்
தரையில் பிரண்டழுதாள்
தானேமிக புலம்பி
தகப்பனண்டை போகலுற்றாள்
தையல் ரதிக்கிளியும்
தாயில்லா பிள்ளைகளை

(521)
ஆதிசிவா என் தகப்பா
தலையி லடித்தானே
தாசமென்று வந்தவர்க்கு
ஓசிவனே கர்த்தாவே
தண்ணியில்லை யென்றானே
தந்தைதாய் வார்த்தைகளை

(522)
தடுக்கநான் சொன்னேனே
தாவிபண்ணும் தட்டானே
சங்கைபட சொன்னேனே
தலையில் விதிப்படிகள்
தப்பாது தாதியரே
தங்க களஞ்சியத்துக்கு

(523)

சிவக்கம்வந்து நேர்ந்ததடி
தரணியில் வாழ்மன்மதற்கு
தாழ்வுவந்து நேர்ந்ததடி
மங்கைரதி கண்டகிளு
மன்மதற்கு வந்ததடி
மாறளவு தண்ணீர்

(524)

மண்மேல் பிறண்டோட
மார்மே லறைந்துக்கொண்டு
மயூதேவர் ஐம்பாளுர்
மகாசபையில் தேவர்களும்
மாமுனிவ ரெல்லோரும்
மன்மதனுர் வேகுரலை

(525)

மரப்பாக பார்த்திருந்தார்
அந்தநல்ல வேளையிலே
அன்னரதி பெண்ணுளும்
அமவயற்றில் தானடித்து
அழகான மன்மதரும்
அக்கினியாய் தானெறிய

(526)

அதைதகண்டு தான்பார்த்து
அழகு ரதிதேவியரும்
அங்கமெல்லாம் தானுருகி
அதிகோபம் தான்பிறந்து
அறனுடைய பாதத்தில்
அலறிப்போய் தான்விழுந்தாள்

(527)

அழுது புலர்பலுற்றுள்
அருணைவாதி யண்ணோர்
காசியில் அமர்ந்த லிங்கம்
கயிலையிலே வாழும் லிங்கம்
கன்னப்பன் தானுகந்த
கண் மெகிழ்ந்த லிங்கம்

(528)

காசியேகாம்பர லிங்கம்
கரியுரித்துப்போர்த்த லிங்கம்
கனகசபை தனிலே
காளியுடன் ஆடுலிங்கம்
கருணைவயித்திய லிங்கம்
காலவிஷம் உண்டலிங்கம்

(529)

கருப்புரி பாலருக்கு
கனத்தமுடி சாய்த்தலிங்கம்
கலமலையாய் நின்றலிங்கம்
சாக்ஷிதரும் தர்மலிங்கம்
கனகமணி சொக்கலிங்கம்
கங்கைமதி தரித்த

(530)

கடவுளானந்த லிங்கம
கடிகமலர் தானணியும்
கறைகண்ட நாதலிங்கம்
காலனை உதைத்தலிங்கம்
கரியமால் அயனுக்கு
கண்ணனுக்கு எட்டாமல்வளர்ந்த லிங்கம்

(531)

காலகால லிங்கம்
காரணனாய் நின்றலிங்கம்
என்கண்ணான மன்மதனை
கண்ணாலெரித்த லிங்கம்
சத்தனே என்தகப்பா
என்கண்ணான மன்மதனை

(532)

கண்ணை யெழுப்புவையா
என்மேல் கடாக்ஷம்வைத்து
என்னை ரக்ஷிக்க வேணுமையா
கன்னி புலப்புறத்து
கடாக்ஷமோ உந்தனுக்கு
கார்வண்ணன் தன்மகனே

(533)
என்கணவனை நீயெழுப்பும்
என்றுகால்மீதில் தான்பணிந்து
கதறிஅழுக லுற்றாள்
கன்னிரதி அந்நேரம்

(534)
[ரதிதேவி ஈஸ்பரரைக்காணுதல்]
அபயம் அபயமையா
ஆண்டவனே தஞ்சமையா
ஆதிசிவா யெந்தகப்பா
அண்டரண்ட லோகமெல்லாம்
அமர்ந்த தயாபரனே
ஐங்கரனை ஈன்றதொரு
ஆதிசிவன் போற்றியென்று

(535)
அடிவணங்கி தெண்டனிட்டு
ஆதரவு சொல்லுமென்று
அழுதுமிகப் பிரண்டு
அபயமென்று தானழுதாள்
அன்ன ரதியாளும்
அமுதமொழி தன்னை

(536)
ஆதிசிவன் தான்கேட்டு
அவள் அழுகின்ற
அன்ன ரதியாளே
ஆயியெனை யீன்ற
ஆத்தாள் சிவகாமியே
அந்திர லோகக்கன்னி

(537)
அரம்பையர்க்கு நாயகமே
அன்னமே தேனே!
ஆண்மையுடன் உன்கணவன்
அஞ்சாமல் எந்தபகை
அங்காரமாக வந்து
அரனார் கருணைசெரி

(538).

அறியாத மூடரைப்போல்
ஐந்து மலர் கணையால்
ஆண்மையுடன் தானெய்தான்
அனலா யெரிந்தானம்மா
அழுது புலம்பாதே
ஆயாசம் கொள்ளாதே

(539)

அயன் விதிக் கென்ன செய்வோம்
அழவேண்டாம் என் மகளே
அழகுரதி பெண்ணங்கே
அழவேண்டாமென்று சொன்ன
அரனாரே என் தகப்பா
ஆதரவு சொல்லவந்தீர்

(540)

அஞ்சுவயதிலே நான்
அவருக்கே பாரியென்று
ஆனையின்மேல் பேரிகையை
அடித்தீரே அப்போது
ஆயன்மகன் தனக்கு
அப்படியே பாரியென்று

(541)

அமரர்முனி காசதரும்
அழகாக தான் கூட
ஆயன்மகன் மன்மதற்கு
அருங்கிளியை தானளித்தீர்
அந்தப்படி போலே
மன்மத சுவாமி

(542)

அரசபட்டம் மாளாமல்
அக்கினியாய் தானெரிக்க
அடுக்குமோ என் தகப்பா
ஆனழகன் போனபின்பு
அரைநாழி நானிருக்கேன்
அரிக்திருந்து என்னை

(543)

அவருக்கு யோனளித்தீர்
அவர்போன பின்பு
அடியாளுக் கென்னவழி
என்று அலரிபுலம்பி
ஆனாலும் எந்தகப்பா
என்னழகுள்ள மன்மதனை

(544)

அழைப்பிக்க வேணுமென்று
ஆதி சிவனிடத்தில்
அழுதுமிக உரைத்தாள்
அருமை ரதிதேவியரும்
அழைப்பிக்க வேணுமென்று
அன்புடனே தானுரைத்தாள்

(545)

அழகுள்ள என்மகனே
அழுதாலு மிப்பொழுது
ஆயன் குலந்தனிலே
அழிந்தவர்கள் பிழைத்ததுண்டா
அழிக்காத வார்த்தைகளை
அவதடுத்து சொல்லாதே

(546)

ஆங்காரமே நினைத்தான்
அவன் பஸ்பமாகி விட்டான்
ஆரணனும் நாரணனும்
அவராலும் ஆகாது
அம்மா உனையீன்ற
ஆதிபர மேஸ்பரியாள்

(547)

அவளாலும் ஆகாது
அண்டத்து வானவர்கள்
அவராலெங்காலு மாகாது
அழகுள்ள என்மகனே
எழுத்துப் படியாக
இப்போவந்து சேர்ந்ததம்மா

(548)

எழுத்தை விலக்க
 எவராலு மாகாது
என்னசெய்வே னென்ற
 எடுத்துரைத்தார் ஈஸ்பரனும்.
என்னாலே குற்றமில்லை
 என்மகளே சொலகிறேன்கேள்

(549)

எனக்குப் பகையாக
 எய்துவிட்டான் வானாசம்
என்மீதில் பட்டவுடன்
 என்னங்கம் பதறி
எறித்துவிட்டேன் மன்மதனை
 எனக்கு எழுப்பதெரியாது

(550)

ஏங்கி புலம்பாதே
 எம்பெருமான் மருமகளே
எல்லவரும் பார்த்திருக்க
 எடுத்துரைத்தார் ஈஸ்பரரும்
இன்ப ரதிக்கிளியும்
 ஏதுயினி செய்வேனென்று

(551)

ஈஸ்பரியாள் தன்னிடத்தில்
 எதுரைப்பாள் அந்நேரம்
என்தாயே ஈஸ்பரியே
 ஏழைமுகம் நீபார்த்து
இரங்கியருள் செய்யுமென்றாள்
 இன்பரதி தேவியரும்

(552)

[ரதிதேவீ புலம்பல்.]

அழகு ரதிதேவியரும்
 அழுதாமிகப் புலம்பி
அடித்துக்கொண் டேதுரைப்பாள்
 அண்டர் தபோதனரே
ஆயிரங்கண் யிந்திரனே

(553)

ஐந்துமுகப் பிர்மாவே
அண்டமுடி தேவர்களே
அஷ்ட திக்கு பாலர்களே
அருக்கோளும் நாரதரே
ஆடரம்பை வஞ்சியரே
அமரிட மங்கைகளே

(554)

அமர்க்க சபோதனரே
ஆணைபெறி யோகிகளே
அருமையுள்ள வஞ்சிகளே
ஆகாச மீனுகளே
அப்புவிதற் சூரியரே
ஆகாச வாணியரே

(555)

அமர்ந்த பூமிதேவியரே
அன்னையெனும் பார்வதியே
அம்மாமி லக்ஷிமியே
அலைகடலில் பள்ளிகொள்ளும்
ஆதி நாராயணரே
இந்த அனியாயம் என்னசொல்வேன்

(556)

ஆண்குயிலை கொண்டுவந்து
அனலாயெறித்தீர் இந்த
அன்னீதத்துக்கு என்னசெய்வேன்
ஆண்பாவம் ஆகாது
ஆண்கிளியை காணாமல்
அழுகிறது நீதியல்ல

(557)

நான்தபசை தானழிக்க
ஆகாமல் உங்கள் கையால்
அழைத்துவந்தீர் மன்மதனை
அக்கினி கொழுந்தாக
அரனார் எறித்துவிட்டார்
அன்னீதமாக யிப்போ.

(558)
உங்கள் அங்கம் குலுங்குதோ
அமர்ந்திரோ பட்டத்தில்
அன்ன ரதிதேவியரும்
ஆத்தாள் சிவகாமி
அங்கையர்கண் மீனாக்ஷி
அன்பாய் யெனையீன்ற

(559)
அலங்கார பார்வதியே
அருமிருந்து பார்த்தியோ தான்
அருமையாய் தான்வளர்த்த
அரனாரே என்தகப்பா
என் அழகுள்ள மன்மதனை
அனலாய் எரித்தீரோ

(560)
ஆயிரங்கண் யிந்திரரும்
அண்டமுனி தேவர்களும்
அழைத்துவந்து விட்டார்கள்
அந்தபிழை பொருத்து
அபயஸ்தம் தாருமையா
ஆண்டவனே என்தகப்பா

(561)
என்று அம பணிந்து கேழ்க்கையிலே
ஆயன்முதல் பிர்மாவும்
ஆயிரங்கண் யிந்திரரும்
அண்டர் தபோதனரும்
அஷ்டதிசை பாலகரும்
அனைவோரும் தானெழுந்து

(562)
அரனாரை தெண்டமிட்டு
அண்டரண்ட பிர்மாண்டம்
அளிக்கும் தயாபரனே
ஆயன்சதா வேதமுடி
ஆன சதாசிவனே
அலைகடலில் நஞ்சை

(563)

அமுதாக உண்டவனே
அன்று புரமெரித்த
ஆனந்த ருத்திரனே
அவனியில் மார்க்கண்டர்க்காய்
அந்தகனை தானுதைத்த
அண்ணல் பெருமானே

(564)

நாங்கள் அறியாமல் செய்தபிழை
அடியவர்மேல் பொறுத்து
அனுக்கிரகம் செய்யுமையா
அனங்க ராஜேந்திரனே
அனலா யெரித்ததினால்
அழுது ரதிதேவியரும்

(565)

உங்கள் அழகுதிருமகளும்
அழுது புலம்புறதை
அடியார்கள் என்னசொல்வோம்
அழகுமணி மன்மதரே
ஆயனார் பாலகனே
அறியாமல் காவிருந்தால்

(566)

அண்டர் புவனத்தில்
அதிலிருக்கும் ஜெந்துக்களும்
அதிமோக மில்லாமல்
அலைந்து திரிந்துவிடும்
அண்டர்புவன மெங்கும்
ஆண்டவனே அடையமென்று

(567)

அவ்வவரும் நின்று
அட்டணிக்கு கேழ்க்கையிலே
அப்போது ஈஸ்வரரும்
அங்கே மனமிரங்கி
அழகுமன்மத னெரித்த
அருஞ்சாம்பல் உருவுசெய்து

(568)

அமுர்த குகவண்டல்
அருகெலும்பு நீர்தெளித்து
அஃ்திரு மந்திரத்தால்
அடித்தார் பிறம்பதினுல்
அடிப்பிரம்பு வாங்குமுன்னே
அலங்கார மன்மதரும்

(569)

ஐந்துகணை யேந்திமிக
அலரி எழுந்திருந்து
அணங்க ராஜேந்திரனும்
அமுர்தமொழி வார்த்தையுடன்
அண்ணல் பெருமானே
அரனை வலம்வந்து

(570)

அதிசய யத்துடனே
அடிபணிந்து தெண்டனிட்டு
அப்போது நின்றூர்தான்
அழகுமணி மன்மதரும்
அடியேன் யான்செய்தபிழை
ஆண்டவனே நீபொருத்து

(571)

அடியேனைக் காருமையா
ஆயிபரு பரியே
அமுர்தகுண பார்வதியே
அடிபணிந்து மன்மதரும்
அன்பாக நீர்கையிலே
மாதுமையாள் தன்னை

(572)

மகிழ்ந்து இடபுரத்தில்
மகாதேவர் அப்போது
மன்மதரை தான்பார்த்து
வாய்மொழிகள் யேதுரைப்பார்
மாயன் சலுவையினுல்
வந்து கணை விட்டாயோ

(573)

வாணவர்கள் சொல்கேட்டு
வஞ்சம் நினைந்தாயோ
மன்மதரே என்றுசொல்லி
மகாதேவர் தன்மீதில்
மதிகதயவாய் இதங்கி
மகிச்சியாய் அங்கசனே

(574)

மாரோக்கியா புரத்தில்
அரசாளு மென்றமவர்
மாளா வறங்கொடுத்து
வாழ்த்திமிக தேவர்
வடகைலை லோகம்
வண்மையுடன் தானமர்ந்தார்

(575)

மாயிரங்கண் யிந்திரரும்
மண்டர்முனி தேவர்களும்
மஷ்ட திசை பாலகரும்
மறுங்கோளு நாரதரும்
மவரவர்கள் தானும்
வரிசையுடன் தானமர்ந்தார்

(576)

மன்மதவேள் அங்கசனும்
மங்கைரதி தேவியாரும்
மாரோக்கியா புரத்தில்
வண்மையுடன் சேர்ந்து
வையகம் எங்கும்வாழ்க
மரசாண்டு வாழ்ந்திருந்தார்

(577)

மன்மத ராஜேந்திரனுர்
மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தார்
படித்தவரும் கேட்டவரும்
பண்புடனே வாழ்வார்கள்
திருச்சிற்றம்பலம்
திருவடிசரணம்.



காமதகன பாட்டு

முற்றிற்று.

சத்தாரியா அச்சுக்கூடம்,

திண்டிவனம்.